YZw M95
N56

105981

க்ஞும் ஏ

பத்துதான

க்ஞம்

55/1-87

# பத்துதான யக்ஞம்

55
1-57

ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு

YZM95
N56
981

ப் பிரசுராலயம்
சர்வசேவா சங்கம்)
ஞ்சாவூர்

மூன்றாம் பதிப்பு—டிசம்பர், '56—10,000

Y2wM95
N56

விலை அணா 4

மொழிபெயர்ப்பு :
ஜி. சுப்பிரமணியம்

10598I

Kabeer Printing Works, Madras (3448)

# பதிப்புரை

பூதான யக்ஞத்திலிருந்து இயல்பாகவே சம்பத்து தானம் உதித்தது. இரண்டின் அடிப்படைக் கருத்தும் நோக்கமும் ஒன்றே.

பூமி கிராம சமுதாயத்திற்குப் பொதுவானது என்ற கொள்கை ஏற்கப்பட்டு வருகிறது. தனி மனிதனுக்குக் கிடைக்கும் கல்வி, திறமை, செல்வம் முதலிய எல்லாவிதச் சம்பத்திற்கும் மூல காரணமாயுள்ளவை சமூகத்தின் பலவிதமான உழைப்பும் உதவியுமே. ஆகவே, தனி மனிதன் வருமானத்தில் அவன் குடும்பத் தேவைக்குப் போக மிகுதியாகவுள்ளது திரும்பச் சமூகத்திற்குக் கிடைப்பது தான் நீதி.

சம்பத்து தானத்தின் இவ்வாதாரக் கருத்தையும் இறுதி இலட்சியத்தையும் ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு அவர்கள் இந் நூலில் தர்க்க ரீதியில் வெகு தெளிவாக நிரூபித்துள்ளார். இதை ஆழ்ந்து படிப்பவர்களின் மனச்சாட்சியும் தர்ம உணர்ச்சியும் தூண்டப்படும் என்பதில் ஐயமில்லை.

இது பற்றிய காந்தியடிகளின் கட்டுரையையும், வினோபாஜியின் கருத்துத் தொகுப்பையும் ஸ்ரீ ஜாஜு அவர்கள் தமது புத்தகத்தில் சேர்த்துள்ளார்.

சம்பத்து தானமளிப்போருக்கும், பூதான-சம்பத்து தானத் தொண்டர்களுக்கும் உபயோகமான விளக்கங்கள் சில சமீபத்தில் 'சர்வோதயம்' பத்திரிகையில் வெளி வந்தன. அவை இதில் அநுபந்தங்களாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இந்நூலை ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்து உதவிய பண்டித ஜி. சுப்பிரமணியம் அவர்களுக்கு எமது நன்றி.

தஞ்சாவூர்,
4-12-1956

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)

# பொருளடக்கம்

பக்கம்

சமப்பங்கீடு—காந்தியடிகள் ... 1

செல்வமனைத்தும் இராமனுடையதே—விநோபா ... 5

பறித்தலும் வௌவுதலும்—இது சமூகத்திற்கே—தியாகக் கட்டும் போகக் கட்டும்—சம்பத்து தான யக்ஞ வழிகாட்டி.

சம்பத்துதான யக்ஞம் ... 17

முகவுரை—தானமும் சம்பத்துக்களின் உடமையும்—உரிமையில் உரிமையற்றது எப்படி?—சட்டத்தையும் சம்மதத்தையும் விட நியாயம் மேலானது—செல்வம் எப்படி உண்டாகிறது?—உழைப்பாளி, அறிவாளி—மேலோன் யார்?—அறிவாளிகளுக்கு அதிகப் பணம் சம்பாதிக்க உரிமையுண்டா?—பணம் சம்பாதிக்க புத்தியை உபயோகிப்பது சரியா?—பணக்காரர் தர்மகர்த்தாவாக வேண்டும்—தானத்தில் குறைபாடு—தலைவிதி வாதம்—சுயநலத்தின் இடம்—கொடையாளி எளியவன் ஆக நேர்ந்தால்—நாடே குடும்பம்—உடலுழைப்பில் வெறுப்பு—பொருளாதார ஏற்றத் தாழ்வு போகாமல் வழியில்லை—ஏழைகளிடமிருந்தும் ஏன் தானம்?—பணத்தாசை குறைய வேண்டும்—தனிநபர் சொத்து உரிமை—தானத்தின் அளவும் நோக்கமும்—தானத்தின் சில விபரங்கள்.

அநுபந்தம்–1 ... 49

அநுபந்தம்–2 ... 57

# சமப் பங்கீடு

## (காந்தியடிகள்)

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் இயற்கையான தேவைகளைப் பூர்த்திசெய்ய மட்டும் சாதனங்கள் கிட்டவேண்டும், அதிகமாகக் கிடைக்கக் கூடாது என்பதுதான் சமப் பங்கீடு என்பதின் சரியான பொருள். உதாரணமாக ஜீரண சக்தியற்ற ஒருவனுக்கு 10 தோலா உணவு போதுமானதாகவும், இன்னொருவனுக்கு 40 தோலா உணவு தேவைப் படுகிறது என்றால், இருவர் தேவைகளும் பூர்த்தியாக வேண்டும். இந்த லக்ஷியத்தை நடைமுறையில் அமலாக்கச் சமூக ஏற்பாடு முழுவதும் புனரமைப்புப் பெறவேண்டும். அஹிம்சா சமுதாயம் இதற்குப் பதிலாக வேறு லக்ஷியத்தை அளிக்க முடியாது. இந்த லக்ஷியத்தை அடைய முடியாமல் இருக்கலாம்; எனினும், இதையே குறிக்கோளாக்கி இதை எய்தும்வரை இடையறு முயற்சி செய்தாக வேண்டும். இந்த லக்ஷியத்தை நோக்கி நாம் முன்னேற முடிந்த அளவுக்கு நமக்குச் சந்தோஷமும், சுகமும் கிடைக்கும்; அஹிம்சா சமுதாயத்தை உருவாக்குவதில் அந்த அளவுக்கே நம் உதவியும் இருக்கும்.

அஹிம்சா முறையில் சமப் பங்கீடு எவ்வாறு ஏற்படும் என்று ஆராய்வோம். இந்த லக்ஷியத்தை வாழ்க்கையின் அங்கமாக ஏற்றுக் கொண்டவன் முதலாவதாகத் தன் சொந்த வாழ்வில் அவசியமான மாறுதல்கள் செய்து கொள்ள வேண்டும். இதுவே இந்த லக்ஷியப் பாதையின் முதற்படியாகும். இந்தியாவின் ஏழைமையைக் கருதித் தன் தேவைகளைக் குறைந்த பட்சமாக்கிக் கொள்வோன்,

வாழ்க்கைக்கு வழி செய்வதில் நேர்மையற்ற முறைக்கும், தரகு பேரத்திற்கும் இடங்கொடான்; தன் பழக்க வழக்கங்களை, வாழ்க்கை முறையைப் புதிய கருத்திற்கிணங்க அமைத்துக் கொள்வான். அவன் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அடக்கம் இருக்கும். தன் வாழ்வில் சீர்திருத்த முடிந்த அனைத்தையும் செய்து முடித்த பின்பே அவன் தன் தோழர்களிடமும், அண்டை அயலாரிடமும் இந்த லக்ஷியத்தைப் பரப்ப வல்லமை பெறுவான்.

சமப் பங்கீடு என்ற தத்துவத்தின் அடிப்படையில், பணக்காரர்களிடம் உள்ள அதிகப் பணத்திற்கு அவர்கள் தர்மகர்த்தா என்ற கருத்து இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; ஏனெனில், இத் தத்துவப்படி அவர்கள் மற்றவர்களைவிட அதிகப் பணம் வைத்துக் கொள்ளக் கூடாது. இது எப்படி முடியும்? அஹிம்சை வழியிலா, பணக்காரர்களின் செல்வத்தைப் பிடுங்கியா? இரண்டாவது முறைக்கு இயற்கையாகவே பலாத்காரம் ஆதாரமாகிறது. பலாத்கார முறையினால் சமூகத்திற்கு நன்மையில்லை. இதனால் சமூகத்தின் சக்தி குறையும்; ஏனெனில் செல்வத்தை வளர்க்கும் சக்தியுள்ளவர்களின் நற்குணங்கள் சமூகத்திற்குக் கிட்டா. எனவே, அஹிம்சா முறையே சிறந்தது என்பது தெளிவு. செல்வவந்தர்கள் தம் செல்வத்தைத் தம்மிடம் வைத்துக்கொள்ளலாம்; அதில் தம் தேவைக்கு நியாயமாக வேண்டியதை உபயோகித்துவிட்டு, மீதியைச் சமூக நலனுக்காக தர்மகர்த்தா என்ற முறையில் காத்து வரவேண்டும். இச் சர்ச்சையில் தர்மகர்த்தாவின் நாணயம் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இத்துறையில் பெரு முயற்சி செய்தும் பணக்காரர்கள் ஏழைகளின் சரியான பாதுகாப்பாளர்களாகாமையால் ஏழைகள் அதிகக் கஷ்டப்பட்டு பட்டினிக்கு இலக்கானால் என் செய்வது? அஹிம்சை மயமான ஒத்துழையாமை, சட்டமறுப்பு போன்ற சரியானதும் பழுதுபடாததுமான சாதனங்களைக்கொண்டு இச் சிக்கல் தீர்க்கப்படும். ஏழைகளின் ஒத்துழைப்பின்றிச் சீமான்கள் செல்வம் சேர்க்க முடியாது. ஏழைகளிடம் இக்கருத்துத் தோன்றிப் பரவுமானால் அவர்கள் பலவான்கள் ஆவார்கள்; கோரமான ஏற்றத்தாழ்வின் விளைவாகப் பசியும் பட்டினியும் வாட்டமடியநேரும் கொடுமையிலிருந்து அஹிம்சை மயமான சாதனங்களால் தப்புவதற்கு அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

—“ஹரிஜன்” 25-8-40.

# செல்வமனைத்தும் இராமனுடையதே

## (வினோபா)

1951 ஏப்ரல் 18ம் தேதியன்று பூமிதான யக்ஞக் கருத்து பிறந்தது. இப்பொழுதோ நாடு முழுவதிலும் மக்களுக்கு இது பிடித்திருக்கிறது என்று கொள்ளலாம். பூமிதான யக்ஞத்துடனேயே சம்பத்து தான யக்ஞமும் ஏன் நடத்தக்கூடாது என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது. ஆனால் நிலப் பிரச்னை அடிப்படைப் பிரச்னையாதலால் அது தீராவிட்டால், நாட்டிற்கு ஆபத்து என்று புலப்பட்டது. எனவே, முதலில் அப் பிரச்னையைத் தீர்த்தல் நலம் என்று எண்ணினேன். தவிரவும், நிலம் கடவுளால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதம் என்பதை எல்லோரும் இயல்பாகவே புரிந்துகொள்ளக் கூடும். உற்பத்தி அனைத்திற்கும் அடிப்படைச் சாதனம் பூமி என்ற வகையிலும் முதலில் நிலப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளுதல் சரியெனத் தோன்றிற்று. பின்னர் முறையாக ஒவ்வொரு படியாய் முன்னேறுதலே அஹிம்சா வழிக்கு உகந்ததாகும்.

ஆனால் பூமிதான யக்ஞ வேலை முன்னேறும்போது, அதேபோல் சம்பத்து தானமும் கேட்காமல் நம் கருத்து பூர்த்தியாகாது என்பது புலப்படவே, கடைசியில் மக்களிடம் செல்வத்தின் ஒரு பங்கைத் தானமாகக் கேட்பதென நிச்சயம் செய்து கொண்டேன். நான் கோருவது ஆறில் ஒரு பங்கு. அவரவர் சிந்தித்து எவ்வளவு கொடுத்தாலும் சரி. செல்வத்தை யார் தம் வல்லமையால் சேர்த்தாலும், அதைத் தமக்கென்று இன்றி எல்லோருடைய உபயோகத்திற்காகவுமே கடவுள் தம்மிடம் ஒப்படைத்திருக்கிறார் என்ற பாவனை கொள்ளவேண்டுமென்பதே இக் கோரிக்கையின் கருத்து. நம்மிடமுள்ள செல்வம் சேர்க்கும் வல்லமை கடவுள் அளிப்பே.

நான் பணத்தைத் தொடவும் விரும்பவில்லையென்று

கால்நடை யாத்திரையில் பலமுறை சொல்லியுள்ளேன்; அப்படியானால் நான் சொத்தில் பங்கு கேட்பது எப்படிப் பொருந்தும்? நான் செல்வத்தை என் கையால் தொடவே விரும்பவில்லை. அதைப் பராமரிக்கவோ, செலவு செய்யவோ, கணக்கு வைத்துக் கொள்ளவோ எனக்கு விருப்பமில்லை. நான் இவற்றிலிருந்து விலகியிருக்க விரும்புகிறேன். பொதுஜன நலனுக்காகத் திரட்டிய பெருநிதிகளைப் பல பொது ஸ்தாபனங்கள் நிர்வகித்து வருகின்றன. இப்படிச் செய்யவும் நான் எண்ணவில்லை. பல சமயங்களில் பல காரியங்களுக்காகச் சேகரிக்கப்படும் பொதுநல நிதிக்கும், இந்த சம்பத்து தான யக்ஞத்திற்கும் பெரிய வேற்றுமையுண்டு. அதாவது இந்த யக்ஞத்தில் ஒவ்வொரு வருஷமும் சம்பத்து தானமாகப் பங்கு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகையால்தான் கொடையாளரிடமே அவர் தானம் கொடுத்த பணம் இருக்க வேண்டுமென்று நினைத்தேன். நம் தீர்மானப்படி சம்பத்துக்களை விநியோகம் செய்து அதற்கெனக் கணக்கு வைத்துப் பிரதி வருஷமும் எமக்கு அதை அனுப்பி வரவேண்டும். எனவே தானம் வழங்குபவர் தம் சொத்தில் ஒரு பங்கை தானமாக வழங்குவதோடு தம் அறிவையும் இக்காரியத்தில் உபயோகிக்கிறார் என்றாகிறது. 'நம் தீர்மானப்படி விநியோகம்' என்ற ஷரத்து இருப்பினும் தானம் கொடுப்பவர் தம் சொந்த அபிப்பிராயத்தையும் எமக்குக் கூறலாம்.

தானம் வழங்குபவரிடம் எல்லாப் பொறுப்பையும் ஒப்படைக்கிறேன் என்பதும் அவரிடம் நம்பிக்கையுடன் சேவை பெறுகிறேன் என்பதும் இதனால் புலனாகும். தர்க்கவாதிகள் இம்முறைக்கு ஆக்ஷேபணை கூறலாம். ஆனால் தர்மபுத்திக்கு நம்பிக்கையே ஆதாரம். நம்பிக்கையினால் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு எந்தச் சட்டமுறையினாலும் கிட்டாது. இதே கருத்துடன் சம்பத்து தான யக்ஞ முறையை வகுத்தேன்.



இந்த யக்ஞத்தில் பங்கெடுத்துக்கொள்பவர் தம் குடும்பத்தாருடன் ஆலோசித்து எல்லாருடைய சம்மதத்துடனும் அன்புடனும் இதில் பங்குகொள்ள வேண்டும். பக்திமான்கள் இப்பணியில் ஈடுபடுவார்களானால் வாழ்க்கைத் தத்துவம் என்ற வகையில் இக்கருத்து நாட்டில் பரவவும் சமூகம் "சமத்துவ யோகத்தை" நோக்கித் தானே முன்னேறும் என்று நம்புகிறேன்.

கள்ளாமை, வெளவாமை என்ற இவ்விரண்டையும் இணைப்பதால் பொருளீட்டல் தூய்மை பெறுகிறது. இவ்வாறன்றி தனி நபர் வாழ்க்கையிலோ சமூக வாழ்க்கையிலோ தர்மம் நிலைக்கவியலாது.

கள்ளாமை பொருளீட்டும் முறையைக் கட்டுப்படுத்துகிறது; வெளவாமை பொருளீட்டுவதற்குள்ள எல்லையை வரையறுக்கிறது. உடல் வாழவேண்டுவது முக்கியமாக உடலுழைப்பால்தான் என்று சொல்லுகிறது கள்ளாமை. அதாவது உற்பத்தி செய்யும் உழைப்பினால் உடல்வாழ வேண்டும். உடல் உழைக்காமல் உணவு உண்போமானால் நாம் ஓர் ஆபத்தை ஏற்படுத்திவிடுவோம்.

உலகில் இன்று உள்ள பெருவாரியான ஏற்றத் தாழ்வுகளும், கஷ்டமும், பாபமும் உடலுழைப்பைத் தவிர்க்கும் எண்ணம் காரணமாகவே ஏற்பட்டவை. இவ்வெண்ணமுள்ளவர்கள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ களவு புரிகிறார்கள். எனவே, கள்ளாமை என்ற விரதம் உடலுழைப்பால் பொருளீட்டலை வற்புறுத்துகிறது.

களவு பாபம் என்று சமூகம் கருதினும் இன்று சிலர் திருடிவருகிறார்கள். ஆனால் களவு சரியல்ல என்று நாம் ஒப்புக்கொள்கிறோமல்லவா? சமூகத்திலே இந்தக் கருத்துக்கு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. திருட்டைப் போலவே சேர்த்துவைத்தலும் பாபம் என்று இப்போது கருத வேண்டும். கள்ளாமையையும் வெளவாமையையும் நாம் கற்கவேண்டும். இவ்விரண்டும் பாபங்கள். "கஞ்சன்

கள்ளனுக்கு அப்பன்" என்று நான் பலதடவை கூறியிருக்கிறேன். கருமியும் சேர்த்துவைப்பவனும் இல்லையெனில் களவே இராது.

## பறித்தலும் வெளவுதலும்

நான் பரப்ப விரும்பும் தத்துவத்திற்கு எதிராக இன்று சமூகத்தில் இருந்துவரும் தத்துவத்தை 'பறித்தல்' என்கிறார்கள். 'தனி நபர் சமூகத்திற்காகவே வாழ்கிறார்; எனவே சமூகத்திற்காகத் தனி நபர் சொத்தைப் பறித்தல் குற்றமல்ல; இதற்கு மாறாக, தனி நபர் சொத்துக்களைப் பறிப்பதைத் தடுக்கும் கருத்தே தவறு' என்று பறித்தல் என்ற தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் கருதுகிறார்கள். உலகில் பல நாடுகள் இன்று இக்கருத்தினிடம் கவர்ச்சியடைந்திருக்கின்றன. இதை எதிர்த்து வெளவாமை என்ற தத்துவத்தை நான் கூறுகிறேன். "வெளவாமை என்பது காந்திஜி, வினோபா அல்லது அப்படிப்பட்ட சந்நியாசிகளுக்குப் பொருந்தலாம். ஆனால் சாதாரண மக்களுக்குச் சேர்த்து வைப்பதுதான் முறை" என்று கருதப்படுகிறது. இதனால்தான் சந்நியாசிகளுக்கு மக்கள் மரியாதை செலுத்துவதோடு நின்று, அவர்களைத் தம் வீடுகளிலும் நுழையவிடுவதில்லை! சந்நியாசத்தை இறுதி லக்ஷியம் என்று ஏற்றபோதிலும் குடும்ப வாழ்க்கைக்குச் சேர்த்து வைப்பதே நடைமுறையில் இருக்கிறது. தர்ம தத்துவங்களை இவ்வாறு துண்டாடுவதால் நமக்கு அதனால் சிறிதும் பலன் கிட்டாது. பேராசைக்காரனை எதிர்க்கும்போது ஆசையற்றவனும் பேராசைக்காரனாகி விடுகிறான் என்பதே அதன் பலன். க்ஷத்திரியர்களை அழிக்கவேண்டுமென்பதற்காகத் தானே க்ஷத்திரியன் ஆகி, தன் காரியத்தில் தோற்ற பரசுராமன் நமக்கு உதாரணம். எதிர்க்க விரும்புவோர் எதிரியின் தத்துவத்தை ஏற்றுக்கொள்வாரானால், எதிரியின் ஸ்தூல உருவத்தை அழிக்க முடியுமாயினும், சூக்ஷ்ம உருவத்தை



சிரஞ்சீவியாக்கி விடுவார்கள். இன்று உலகில் பேராசையும் சேர்த்து வைக்கும் எண்ணமும் ஆட்சிபுரிகின்றன. சேர்த்து வைப்பது தவறு என்று கருதமுடியாதபடி சேர்த்து வைத்தல் என்ற தத்துவத்தின் பக்கம் சட்டங்கள் எழுதப்பட்டுள்ளன. திருடுவதைக் குற்றமாகக் கருதுகிறோம்; ஆனால் சேர்த்துவைப்பதன் மூலம் திருடுவதற்கு ஊக்கமளிப்பவர் செயலைத் திருட்டு என்று கருதுவதில்லை. "என் ராஜ்யத்தில் திருடனுமில்லை, கருமியும் இல்லை" என உபநிஷதக்கதையில் அரசன் சொல்லுகிறான். கருமியே கள்வனை உண்டாக்குகிறான். திருடனைச் சிறையிலடைக்கிறோம்; ஆனால் அவன் அப்பனைச் சுதந்திரமாக இருக்க விட்டுவிடுகிறோம்! இந்த யோக்கியர்கள் மதிப்படைந்து சிம்மாசனத்தில் அமருகிறார்கள்! இது என்ன நியாயம்? இப்பேர்ப்பட்டவர்களைத் திருடர்கள் என்று கீதை கூறுகிறது. ஆனால், கீதை சந்நியாசிகளின் புத்தகம் என்று சொல்லி அதிலிருந்து நாம்தான் விடுதலை வாங்கிக் கொண்டிருக்கிறோமே!

## இது சமூகத்திற்கே

யாகத்தில் ஆஹுதிசெய்யும்போது "இந்திராய இதம் ந மம"—இது இந்திரனுடையது, என்னுடையதல்ல—என்று சொல்லுவதைப்போல் இன்று விவசாயத்திலோ, தொழிற்சாலையிலோ எங்கு எது உற்பத்தி செய்தாலும் அதை 'ஸமாஜாய இதம், ராஷ்ட்ராய இதம், ந மம"—இது சமூகத்திற்கு, இது நாட்டிற்கு, எனக்கு இல்லை—என்றாகவேண்டும். நம்மிடம் எது இருப்பினும் அது அனைத்தையும் சமூகத்திற்கு அர்ப்பணித்துவிடவேண்டும். பின்பு சமூகத்தின் சார்பில் நம் தேவைக்குத் தகுந்தபடி கிடைப்பது அமிர்தமாகும்.

குழந்தைப் பருவம் முதல் நமக்குப் பலர் உதவியிருக்கிறார்கள். அக் கடனிலிருந்து விடுபட வேண்டுமாயின் உடல் உழைப்பு என்ற சிறிய முறையில் நாம் சம்பாதித்

ததில் ஒரு பாகம் சமூகத்திற்குக் கொடுத்தல் அவசியம். சிறந்த விநியோகம்—நல்ல பங்கீடு—என்ற இதில் இருக்கிறது.

நான் ஆறில் ஒரு பங்கு கேட்பதால் ஆறில் ஐந்து பங்கை வைத்துக் கொள்வது சரியென்கிறேனா? நான் ஒப்புக்கொள்வது என்ற பிரச்னையே இல்லை. இன்று மனிதன் ஆறில் ஆறு பங்கும் சேர்த்துவைப்பது சரி என்றுதான் கருதுகிறான். ஆறில் ஒரு பங்கு கேட்பதன் மூலம் மனிதனின் இக்கருத்தை தூக்கி அவன் சிந்தனையைத் தூண்டுகிறோம். "ஒரு தடவையாவது ஹரி நாமத்தை உச்சரித்தால் மோக்ஷமடையக் கங்கணம் கட்டிக் கொண்டான்" என்றார்கள் பக்தர்கள். ஆறில் ஒரு பங்கு சமூகத்திற்கு நிரந்தரமாக அர்ப்பணம் செய்யும் நியமத்தை வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டவர் தம் முழுச் சொத்தையும், முழு வாழ்வையும், தம் உடல் பராமரிப்பையும்கூட, சமூகத்திற்கு அர்ப்பணித்து விடக் கங்கணம் கட்டிவிட்டார் எனலாம். சம்பத்து தான யக்ஞத்தைக் குறித்த நீண்ட கண்ணோட்டம் இது.

## "தியாக"க் கட்டும் "போக"க் கட்டும்

வாழ்நாள் முழுவதும் ஆறில் ஒன்றோ எட்டில் ஒன்றோ தானமாகக் கொடுப்பது என்ற கருத்தே பலருக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஒருமுறை மணம் செய்து கொண்டபின் வாழ்நாள் முழுவதும் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்கிறோமே என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. ஹிந்து தர்மத்தில் சந்நியாசம் வாங்கிக் கொள்ள வழியிருப்பினும், இறக்கும் வரையில் கட்டுப்பட்டிருக்கும் மனிதன் இக் கட்டுப்பாட்டிற்குத் தயங்குவானேன்? இதில் எங்கும் தியாகமே பரிமளிக்கிறது. போகத்திற்கு இடமில்லை. எனவே நற்கருத்து உடையவர் இதைத் தம் வாழ்க்கையின் ஒரு அங்கமாக நினைக்கவேண்டும். வாழ்வு முழுவதும் நல்ல காற்றும் நல்ல உணவும்



கொள்வதுபோல் வாழ்நாள் முழுவதும் நம் சொத்தின் ஒரு பகுதியை மக்களுக்காக நாம் கொடுக்கவேண்டும். உண்மையில் முழுச் சொத்தையும் கொடுக்கவேண்டியது தான். ஆனால் தர்மகர்த்தா என்ற முறையில் தம்மிடம் சிறிது வைத்துக்கொண்டு மீதி முழுவதையும் கொடுத்துவிடவேண்டும்.

சொத்து உரிமையை அழிக்க விரும்புவது நம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானதென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தச் சட்டம் தேவர்களால் இயற்றப்பட்டதா என்று நான் கேட்கிறேன். மக்கள் கருத்து மாறுவது போலவே சட்டமும் மாறும். பலவந்தமாக ஏதோ கருத்து ஒன்றைத் திணிக்கவில்லை. கருத்தை எடுத்துச் சொல்ல நமக்கு உரிமையுண்டு; புரிந்துகொள்வது மக்கள் பொறுப்பு. மக்கள் உண்மையை உணர்ந்தார்கள் என்றால் அது சட்டத்திற்கு விரோதம் ஆகுமா? நமது சட்டம் ஒவ்வொரு நாளும் வளரவேண்டுமென்பதே நம் விருப்பம். சொத்துரிமை என்ற எண்ணம் தொலையவே வேண்டும். "நம்மிடம் அதிக புத்தியும், அதிக சக்தியும், அதிக முக்கியத்துவம் வாய்ந்த வேலையும் இருக்கிறது; எனவே, நமக்கு அதிகப் பணம் கிடைக்க வேண்டும்" என்று பணம் பொறுப்புடன் இணைக்கப்பட்டிருப்பது தவறு எனக் கருதுகிறேன்.

இக்கருத்து மனத்தில் பதிந்துவிட்டால், ஒருவன் ஏழையோ பணக்காரனோ, போகியான குடும்பியோ, தியாகியான ஊழியனோ, அவன் சம்பத்து தான யக்ஞத்தில் தீக்ஷை ஏற்றுத் தன் சொந்த அனுபவத்தில் இக் கருத்தை மேலும் சோதிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

என் வேலையைப்பற்றி எவ்விதத் தப்பபிப்பிராயமும் வேண்டாம். இது ஒரு தர்ம தத்துவம். மனிதனைப் பற்றுதலிலிருந்து விடுவித்துப் பற்றற்றவனாகச் செய்வது என் நோக்கம். எனவே பற்றுள்ள பெரிய பணக்கார

ரிடமே தானம் கேட்கப் போகவேண்டும் என்பது இல்லை. பற்று என்பது கோவணத்திடமும் இருக்கலாம். எனவே ஒவ்வொருவரையும் அணுகி, கருத்தைத் தெரிவித்து, தானபத்திரம் பெறவேண்டும்.

சம்பத்து தான யக்ஞம் மிகவும் உயரிய விஷயம். பூமி தான யக்ஞத்தில் ஒவ்வொருவரிடமிருந்தும் நிலம் கேட்கிறோம். தனிப்பட்ட தானபத்திரம் எழுதிக் கையெழுத்து வாங்கிச் சர்க்கார் அதை ஏற்ற பின்பு அது அமலாகிறது. அப்படிப்பட்ட முழுத்திட்டம் இந்த யக்ஞத்தில் இல்லை. எனவே இதற்கென வாக்குச் சீட்டு எழுதிக்கொடுப்பவனே தன் மனத்தில் இருக்கும் கடவுளைச் சாட்சியாகக் கொண்டு தன் வாக்குப்படி நடந்து கணக்கும் வைத்துக் கொள்வான். நாம் சொல்லுகிறபடியே அந்த தானத்தின் உபயோகம் ஆகவேண்டும் என்ற பொறுப்பு அவனுக்கே உண்டு. நிலத்தைப்போல ஏதோ ஒரு தடவை தானம் கொடுக்கும் விஷயமல்ல இது. பிரதி வருஷமும் பங்கு அளிக்கவேண்டும். எனவே தானம் அளிப்பவன் தன் வாழ்க்கையை நிஷ்டை யுடையதாக்கவேண்டும். மனத்துள் இருக்கும் நிஷ்டையைத் தட்டி எழுப்பவேண்டும்.

''செல்வமனைத்தும் இராமனுடையதே.'' இந்நிலையில் ஆறில் ஒரு பங்கு கொடுக்கும் விஷயம் முக்கியமற்றதாகிறது. தன் உடைமையை எல்லாம் சமூகத்திற்கு அளித்துவிட்டுத் தன் உடலுக்காக ஒரு சிறிது எடுத்துக்கொள்வதே உசிதமாக இருக்க வேண்டும். ஆனால் தற்போது சமூகத்தில் இந்த ஏற்பாடு இல்லை; உடனடியாக ஏற்படப் போவதும் இல்லை. எனவே தற்போது ஆறில் ஒரு பங்கு கொடுத்தது போக மீதியில் இன்னும் கொடுக்கச் சிந்திக்கப்பட வேண்டும். ஆறில் ஒருபங்கு கொடுப்பது என்றால் வாழ்க்கையை ஒருவாறு உறுதிப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது கருத்து. அவ்வளவு பங்கும் கொடுக்காவிட்டால் நாம் பாபி ஆவதோடு நம் வாழ்க்கையும் பாபமாகிறது. எனவே கொடுப்பதைக் கடமையாகக் கருத



வேண்டும். மற்றவர் எவ்வளவு கொடுக்கிறார் என்பதில் அக்கறை கொள்ளாமல் நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதைக் கவனிக்கவேண்டும். இது மற்றவர்களைப் பரிசோதிக்கும் விஷயமல்ல, தன் ஆத்ம சுத்தியை, தன் கடமையைப் பற்றிய விஷயம். இது ஆத்மீகப் பணி, ஆத்ம சந்தோஷச் செயல் என்று உணர்ந்தபின்பே இதில் வேலை செய்ய வேண்டும்.

ஒருவன் வாழ்நாள் முழுவதும் ஆறில் ஒரு பங்கு வழங்கிவந்தாலும் அவன் நம் முழுக்கருத்துக்களையும் அறிந்து கொண்டான் என்று சொல்லமுடியாது. அவன் ஏதாவது தொழில் நடத்தினால் அத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் அதில் கூட்டு உண்டு; எனவே எல்லோருக்கும் அவரவர் பங்கு உண்டு. அனைவர்க்கும் பங்கு அளித்தபிறகு மீதமாவதைச் சமூக சேவைக்காகக் கொடுக்க வேண்டும். இதை உணருகிறவனே சம்பத்து தானக் கருத்தை அறிந்தவன் ஆவான். இப்படிச் செய்பவன் ஒருசிறிது சாப்பிட்டாலும் அவன் உணவும் யக்ஞமாகும், ஆஹுதி ரூபமாக அமையும். இந்தவகையில் தன் முழு வாழ்வையும் யக்ஞமாக்கவேண்டும். செல்வத்திற்கு ஒவ்வொருவரும் தர்மகர்த்தாவாக இருக்க வேண்டுமென்று காந்திஜி தீவிரமாக எண்ணிவந்தார். அந்த எண்ணம் இச்செயலினால் பூர்த்தியாகிறது. இதை மிகவும் நவீனப் பொருளாதார சாஸ்திரம் என்றும் உண்மைப் பொருளாதார சாஸ்திரமென்றும் கருதுகிறேன்.

பூமிதான யக்ஞத்தைப்போலவே சம்பத்து தான யக்ஞமும் முக்கியமானது. ஒவ்வொருவரிடமும் நிலம் இருப்பதில்லை; ஆனால் ஒவ்வொருவரிடமும் சம்பத்து இருந்துவருகிறது. நிலம் என்பது சம்பத்தின் ஓர் உருவமே. புத்தி, பலம், பணம் என்பவையெல்லாம் சம்பத்து என்பதில் அடங்கியவையே.

ஒருவரிடம் குறைவாக இருப்பினும், தனக்கே போதாத உணவில் ஏழைக்கும் சிறிது உணவு அளிக்க

வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். நம் குடும்பத்தில் மற்றொரு நபரை ஏற்றுக்கொள்கிறோம் என்பது இதன் பொருளாகிறது. எனவே இது நன்கு ஆலோசிக்க வேண்டிய விஷயம். ஒவ்வொருவரும் சிறிது செட்டான வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது இதன் பொருள். பல மக்கள் வயிற்றுக்கஞ்சியிலிருந்து சேமித்துச் சிறிது கொடுக்கவேண்டியிருக்கும். தன் குடும்பச் செலவைச் சமாளிப்பதுடன் தரித்திர நாராயணன் (ஏழை) கவலையும் அவனுக்கு உண்டாகிறது. இது ஒரு தர்ம தத்துவம். இதை நன்கு உணர்ந்து அமல் நடத்த வேண்டும். இந்தியாவில் தானமளிக்கும் முறை வழக்கமாக வந்திருக்கிறது. பசித்தவனுக்கு உணவளித்த பின்பு தான் உண்பான். இதையே தானம் எனலாம். இது நம் பரம்பரைச் சிறப்பு. இன்று இது கொஞ்சம் குறைந்து விட்டது. நகரங்களில் இது மிகவும் குறைந்துவிட்டது. இன்றுவரை தனிப்பட்டவர் நற்குணம் என்ற உருவத்தில் இருந்ததை இனிச் சமூக நற்குண ரூபமாக்கவேண்டுமென்று நான் சொல்லிவருகிறேன்.

சில நற்குணங்கள் மலரவில்லை; நாம் அவைகளை வளர்த்து மலர்ச்சிகாண வேண்டும். இரக்கம், கருணை மலர்ந்தது. இரக்கம் என்றால் என்ன? மற்றவர் கஷ்டத்தை நாம் பொறுக்க முடியவில்லை, பார்க்கவும் முடியவில்லை; ஆகையால் அந்த நிலையில் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி யேற்பட்டு உதவி செய்ய வேண்டுமென்ற ஊக்கம் வந்தது. இன்றுவரை கருணையின் உருவம் இப்படியே இருக்கிறது. ஆனால் இனி இதை அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக ஏற்படுத்த வேண்டும். தினமும் குளிப்பதைப் போல் தினமும் சில கருத்துக்களையும் அமல் நடத்தவேண்டும். தன்மேல் அழுக்குப்படிந்த பின்புதான் நான் குளிப்பேன் என்று மனிதன் கருதுவதில்லை; அவன் தினமும் குளித்துவிடுகிறான். கருணையை விஸ்தரித்தால் அது நன்கு வளர்கிறது. நம் சகோதரர்களிடம், பிள்ளைகளிடம் கருணையா காட்டுகிறோம்? இல்லை. அவர்கள் உரிமையை உணர்கிறோம். அதை உணர்ந்து அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்துவிடுகிறோம். இது தினசரி செய்ய வேண்டிய விஷயம். கருணை என்பது பொதுஜன உருவம் எடுக்கும் போது மற்றவர்களைப்பற்றி அக்கரை கொள்ளுவது தானாகவே வந்துவிடுகிறது.



சமத்துவம் என்பதை நடைமுறையில் கொண்டு வந்தால் கருணைவந்துவிடும். கருணைக்குப் பொதுஜன உருவம் கொடுக்கும்போது சமத்துவம், சமப்பங்கீடு முதலியன வந்து விடுகின்றன.

## சம்பத்து தான யக்ஞ வழிகாட்டி

(1) சம்பத்தைத் தன்னிடமோ அல்லது தனக்குத் தெரிந்தவரிடமோ வைத்திருக்கவேண்டும்.

(2) தானமாக வழங்கும் பங்கை வாழ்நாள் முழுவதும் கொடுத்துவர வேண்டும்; ஆகையால் குடும்பத்தில் பொறுப்புள்ளவர் அனுமதியுடன் இதைச் செய்ய வேண்டும்.

(3) கடன் காரர்களுக்கு இதில் இடமில்லை. கடனிலிருந்து விடுபடுவது அவர் முதல் வேலை.

(4) சம்பத்து விநியோகம் (பங்கீடு) என் குறிப்புப் படி நடக்கவேண்டும். இது இத்திட்டத்தின் பெரியதொரு பாதுகாப்பு.

(5) சம்பத்து தான யக்ஞத்தில் கிடைக்கும் வருஷரொக்க வருமானம் முழுதும் அதே வருஷத்தில் செலவழிக்கப்படும். மீதமாக இடமே இல்லை. நாட்டில் பரவலாகச் செய்யவேண்டிய பெரும் வேலைகள் இருப்பதால் எவ்வளவு சம்பத்து (செல்வம்) கிடைத்தாலும் அது அனைத்தும் இயற்கையாகவே அப்பணியில் செலவழிந்து விடும்.

(6) செல்வப் பங்கீடு என்பது தற்போது முக்கியமாக

மூன்று இனங்களின் வாயிலாக நடத்தலாம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது :

(அ) நிலமற்றவர்களுக்கு நிலம் பங்கிட்டுக் கொடுத்த பின் அவர்களுக்கு விதை, மாடு, கிணறு முதலியவைகள் ரூபமாக உதவுதல் ;

(ஆ) தியாக புத்தியுடைய ஊழியர்களுக்குக் குறைந்த பக்ஷ வாழ்க்கை ஊதியம் அளித்தல் ;

(இ) நல்ல பிரசுரங்களை வெளியிடுதல்.

(7) சம்பத்து தான யக்ஞத்தில் பங்கு கொள்பவர்களின் வாழ்க்கைக் குறிப்பு அடைய விரும்புகிறேன். ஆகையால் இந்த யக்ஞத்தில் சேர விரும்புவோர் தம்மைப் பற்றிய சில குறிப்புகள் எனக்கு அனுப்ப வேண்டும்.

# சம்பத்துதான யக்ஞம்

## முகவுரை

இப்போது நாடு முழுவதும் பூமிதான யக்ஞத்தைப் புரிந்து கொண்டுவிட்டது. பூமிதான யக்ஞத்திற்காக நிலம் வாங்க ஊழியர்கள் நிலச்சுவான்தார்களை அணுகும்போது, எங்களிடம் நிலம் கோரப்படுவதுபோல் கோடிக் கணக்கான சம்பத்து உடைய பெரிய பணக்காரர்களிடம் அவர்கள் செல்வத்தில் பங்கு ஏன் கோரக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள். உண்மையிலே, சம்பத்து தான யக்ஞம் பூமிதான யக்ஞத்தில் அடங்கியே இருந்தது. எனினும் இதுவரை அது வெளிப்படையாக உருவெடுக்கவில்லை. இவ்விரண்டிலும் முதன்மையாக பூமிதானம் மட்டும் ஏன் ஆரம்பிக்கப்பட்டதென்று ஸ்ரீ வினோபாஜி பலதடவை எடுத்துக்காட்டிவிட்டார். நிலப்பிரச்னை விசேஷமானது, தனிப்பட்டது என்று யாவரும் அறிவர். கடவுள் மண்ணையும் படைத்து மனிதனையும் படைத்தார் ; மனித வாழ்க்கைக்கு ஆதாரம் மண் (பூமி) தான். எனினும் உடல் உழைத்து மண்ணில் ஏதாவது உற்பத்தி செய்தால்தான் வாழ்க்கைத் தேவைக்கு வேண்டியது கிடைக்கிறது. காற்றும், ஜலமும் போல நிலமும் இருக்க வேண்டும். நிலம் தனிப்பட்டவர் உடமையாக இருப்பது நியாயமல்ல. நிலம் சமுதாய உடமையாகவே கருதப்பட வேண்டும். மனிதன் மண்ணில் உழைத்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதும், அப்படி உடல் உழைப்பவனுக்கு அதன் முழுப் பலனும் கிட்ட வேண்டுமென்பதுமே கடவுள் காட்டிய வழியாகத் தோன்றுகிறது. ஆனால் மனிதன் தவறான செயல் காரணமாக மண்ணில் உழைக்காதவனிடம் பெரும்பங்கு நிலம் சேரும்படி ஆகிவிட்டது. நிலத்தை உழுபவனோ, உழ விரும்புபவனோ இவர்களில் பெரும்பாலோர்க்குத் தன் வயிற்றுக்கு வேண்

டிய உணவுப்பொருள் உற்பத்தி செய்யக்கூடிய அளவு கூட நில உடமை இல்லை. இவர்கள் தங்கள் உழைப்பின் பெரும்பலனை மேற்சொன்ன நில உடமையாளர்களுக்குக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. எனவே நிலமற்றவர் களுக்கு நிலம் கொடுக்கும் பிரச்னை முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது நியாயமே.

இப்போது பூமிதான யக்ஞ வேலை மும்முரமாகப் பரவி விட்டது. அதன் வெற்றியில் சந்தேகமில்லை. இந்த யக்ஞத்தில் நிலம் கிடைத்தவர்களுக்கு வேண்டிய சாத னங்கள், கருவிகள் அளிக்கப் பணம் தேவைப்படும் போது இயற்கையாகவே சம்பத்து தான யக்ஞம் அவசிய மாகிறது. காலப்போக்கில் சம்பத்துதான யக்ஞத்தின் தர்ம சக்கரம் பூமிதானத்தைப் போலவே சுழல ஆரம் பிக்கும். எனவே இதுபற்றி விநோபாஜியின் கருத்துக்களை நுட்பமாக ஆராய்ந்து அறியவேண்டும்.

என் வேண்டுகோள் குறிப்பாகப் பணக்காரர்களுக்கே. சாதாரணமாக, வழக்கத்தில் இருக்கும் பழக்கம் சரி யென்று நினைக்கிறோம்; அதன் ஆதாரத்தை அறிய முயற் சிப்பதில்லை. நாம் அடிப்படையை ஆராய்வோமானால் இதுவரை நாம் கொண்டுள்ள மதிப்பும் எண்ணமும் எவ்வளவு தவறு என்று நம் விவேகத்திற்குப் புலனாகும். பொருள் சம்பாதிப்பது, தன்னிடம் சேர்த்து வைப்பது, அதை உபயோகிப்பது என்ற விஷயத்தில் நம் கருத்துக் கள் எவ்வளவு தூரம் சரியானவை என்று சிந்திக்கச் சில விஷயங்களை நான் பணக்காரங்களின் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட சிந்தனையின் விளை வாகவே மனிதன் ஆத்மீக மேம்பாடு அடைகிறான்.

## தானமும் சம்பத்துக்களின் உடமையும்

இந்த யக்ஞங்களில் வரும் "தானம்" என்ற சொல் லின் உண்மைப் பொருளை அறிய வேண்டியதவசியம். ஏதோ ஒருவன் மற்றவனுக்கு இரங்கி ஏதாவது கொடுப்



பதும், தன் பரலோக நன்மைக்காக ஏதாவது செலவு செய்வதும் இதுவரை "தானம்" என்ற சொல்லின் பொருளாகக் கருதப்பட்டு வந்தது. "தானம் என்றால் சரியான பங்கீடு, நியாயமான விநியோகம்" என ஸ்ரீ சங்கராச்சாரியர் பொருள் படுத்தியிருக்கிறார் என்று விநோபா சொல்லுகிறார். இப்பொருளுக்கு ஏற்பவே "தானம்" என்ற சொல் இங்கு வழங்கப்படுகிறது.

தானம் கொடுப்பவன் எப்பொருளைத் தானம் செய் தாலும் அப்பொருள் கொடையாளரின் உடமை என்றும் அதை அவன் தன் வசம் வைத்துக்கொள்ள உரிமையுடை யவன் என்றும் சாதாரணமாக தானம் என்ற வார்த்தை யில் நாம் ஒப்புக்கொண்டிருந்தோம். ஆனால் பூமிதான யக்ஞத்தில் இக்கருத்து மாறிவிட்டது; தன் தேவைக்கு அதிகமான நிலம் தன்வசம் வைத்துக்கொள்ள ஒருவனுக் கும் உரிமை இல்லை என்று ஆயிற்று. பல காரணங்களால் நம்மிடம் நிலம் வந்துவிட்டது. இதுவரை நம் வசம் அதை வைத்திருந்த தவற்றைத் திருத்த வேண்டும் என்று ஆயிற்று. மறுபக்கம் பார்த்தால் இன்று நிலம் வாங்கிக்கொள்ளும் நிலமற்ற ஏழை தன் ஏழைமை காரண மாகத் தனக்கு உரிமையில்லாத ஒரு பொருளை, மற்றவர் கள் தயவின் உருவாகப் பெறுகிறேன் என்று நினைக்காமல் இந்த நிலத்தை அடைவது என் உரிமை என்று அறிந்து அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் ஏற்படுகிறது.

## உரிமையில் உரிமையற்றது எப்படி ?

செல்வம் பற்றிய இன்றைய கருத்து முறையைப் பார்த்தால் மேற்குறிப்பிட்ட விஷயம் விசித்திரமாகத் தோன்றலாம். "உடலாலோ, அறிவாலோ நான் உழைத் துப் பொருள் சம்பாதித்தேன்; யாரிடமிருந்தும் திருட வில்லை; சட்டபூர்வமான சாதனங்களைக் கொண்டே பணம் சம்பாதித்தேன். அதை அனுபவிக்க எனக்கு உரிமை யுண்டு. ஏன், இந்த உரிமையைச் சட்டமும் ஆமோதிக்

கிறது ; சமூகமும் சம்மதிக்கிறது. இந்நிலையில் எனக்கு அச்செல்வத்தில் உரிமையில்லை என்ற விஷயம் பொருந்த வில்லை. அதே போல, இன்று நிலமோ, பணமோ தானம் பெறும் நபர் அதைச் சம்பாதிக்க உழைக்கவில்லை. அவ னுக்கும் தான சொத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. சட்டப்படி அவனுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. இந் நிலையில் தானமாகப் பெறுவது அவன் உரிமை என்பதை எப்படி ஒப்புக்கொள்வது? கற்பனையால் மட்டும் நடை முறைக் காரியம் ஆகுமா? சட்டம் ஆமோதிக்காதபோது தான் சம்பாதிக்காமல் ஒரு பொருளில் ஒருவனுக்கு எப்படி உரிமை ஏற்பட முடியும்?'' இவ்வாறு பணக் காரர்கள் கேட்கிறார்கள்.

## சட்டத்தையும் சம்மதத்தையும்விட நியாயம் மேலானது

இக் கேள்விக்குப் பதிலளிக்க முயற்சிப்போம். சட்டம், சமூகம் இவைகளின் சம்மதத்தை மதிப்பிடுவோம். சட்டம், சம்மதம் என்பவை தவிர நியாயம் என்பது ஒன்று இருக்கிறதென்பதையும், அது எல்லாவற்றிலும் மேலானது என்பதையும் மறக்கக்கூடாது. அதன் அதிகாரத்தை யாரும் அழிக்கமுடியாது. ஏனெனில் அதன் வேர் வெளியே இல்லை ; அந்தரங்கத்தில், ஆத்மாவில், மனித னுடைய நல்ல விவேக புத்தியில் ஊன்றியிருக்கிறது. மேலும், ஏதோ ஒரு விசேஷ காலத்தில் சமூகமும் சட்ட மும் ஏற்படுத்தியிருக்கும் கருத்து எப்பொழுதும் சரி யாகவே இருக்கும் என்பதும் இல்லை என்பதை இச்சந் தர்ப்பத்தில் கவனிக்கவேண்டும். சட்டம் பெரும்பாலும் வழக்கத்திலுள்ள முறையையே அனுசரித்துப் போகிறது. சமூகச் சம்மதமும் பெரும்பாலும் வழக்கத்தில் வந்த படியே ஏற்படுகிறது. சட்டமும் சமூகமும் ஒப்புக்கொள் ளும் விஷயம் எப்போதும் நியாயமாகவேதான் இருக்கு மென்றும் சொல்வதற்கில்லை. நீண்ட கால சரித்திரத்தை



அலசிப்பார்த்தால், ஒரு காலத்தில் சரியானது என்று ஒப்புக் கொள்ளப்பட்ட முறை காலப்போக்கில் அடியோடு மாறியிருப்பது தெரியும். கருத்து மாறும் போது சட்டமும் மாறுகிறது. ஏதோ கருத்து நிலைத்திருக்கும் வரையில் அது சரியானதுதானா என்ற சந்தேகம் யார் மனத்திலும் ஏற்படவில்லை ; அப்படிச் சிலர் மனதில் சந்தேகம் தோன் றினாலும் அதனால் அக்காலத்துக் கருத்து முறையில் விசேஷம் ஒன்றும் ஏற்படவில்லை. காலப்போக்கில் விவே கம் விழித்தது. இன்று நாம் ஒப்புக்கொண்டிருக்கும் முறை சிறிதும் நியாயமற்றது என்று மனிதன் உணர்ந் தான். கடைசியில் மாறுதல் ஏற்பட்டது. கருத்து மாறி னால் அரசாங்கச் சட்டத்தையும் மாற்ற வேண்டியிருக் கிறது. அரசாங்கம் அப்படிச் செய்யாவிட்டால் அது நிலைக்கமுடியாது. விவேகம் வந்த பின்பு, அதாவது தவற்றை உணர்ந்தபின், கருத்து எவ்வளவு புராதனமாக இருந்தாலும், வியாபகமாக இருந்தாலும், அதை மாற்ற வேண்டியதுதான். ஒன்றிரண்டு உதாரணங்களால் இதை விளக்கலாம். அடிமை முறை ஆயிரக்கணக்கான வருஷங் கள் வரை உலகம் முழுவதும் நடந்து வந்தது. பெரும் பெயர் பெற்ற ஒரு தத்துவ ஞானியும் அதை ஆமோதித் தார். 'இந்த முறை நம் நன்மைக்குத்தான்' என்று சில அடிமைகளே கருதினார்கள். அப்படி யிருந்தும் மனித னது விவேகம் வளர்ந்தது. தன்னைப்போலவே எலும்பும் தசையும் உள்ள, சுகம் துக்கம் என்ற எண்ணம் படைத்த மனிதர்களை மற்றொரு பலவான் அல்லது தன வான் அடிமைத்தளையில் பிணைத்து வைப்பது நியாய மாகுமா என்ற பிரச்னை வந்தது. இதைத் தீர்க்க அவர் களுக்குள் யுத்தமும் ஏற்பட்டது. கடைசியில் அடிமை முறை அழிந்தே விட்டது. இதைப்போலவேதான் ராஜாக் களின் சங்க விவகாரமும். உலக முழுவதும் பல்லாயிரம் வருஷம்வரை தனி நபர் ஆட்சியும், சக்கரவர்த்தியின் ஆட்சியும் நடந்தது.

நம் இந்தியாவிலும் "நா விஷ்ணு:பிருதிவீபதி:" அரசன் விஷ்ணுவின் அம்சம் என்ற அளவிற்கு நம் கருத்து நிலை பெற்றிருந்தது. ஆனால் "ஒரு தனி மனிதனுக்குக் கோடிக் கணக்கான மக்களைத் தன் ஆட்சியில் வைக்க என்ன உரிமை உண்டு?" என்ற பிரச்னை கடைசியில் ஏற்பட்டது. இதைத் தீர்க்கப் பல கொடிய யுத்தங்கள் நடந்தன. பல நூற்றாண்டுகள் வரை எங்காவது ஓரிடத்தில் சண்டை நடந்துவந்தது. கணக்கற்ற மக்கள் கஷ்டப்படவேண்டியதாயிற்று. கடைசியில் ஆட்சி முறையே மாறிவிட்டது! முடிஅரசு மாறிக் குடிஅரசு ஏற்பட்டது. இன்று கூட, சில இடங்களில் ஜனநாயகம் என்ற பெயரால் சில தனிப்பட்டவர் தம் ஏதேச்சாதிகார ஆட்சி முறையைக் கையாள முயற்சிக்கிறார்கள். ஆனால் இவ்விஷயம் அனைவருக்கும் உறுத்துகிறது; இம்முறை கடைசியில் நிலைக்காது என்பதில் சந்தேகமில்லை.

நம் நாட்டில் தீண்டாமை முறையும் இப்படிப்பட்டது தான். தீண்டாமை தர்ம சம்மதமானது என்று கூடக் கருதிவந்தோமே! இப்போது அது சட்டப்படிக் குற்றம்; தண்டனைக்கு உகந்தது. ஒவ்வொரு காலத்தில் கருத்துக்கள் பெரு மாறுதல் அடைந்திருப்பதற்கும், பல்லாயிரம் வருஷம் வரை நீடித்திருந்த எண்ணங்களை விட்டு விடவேண்டியிருக்கிறது என்பதற்கும் பல உதாரணங்கள் கொடுக்கலாம். இதே விஷயம் தான் இன்று செல்வத்தின் உரிமையைப் பற்றியும் ஆகும்.

## செல்வம் எப்படி உண்டாகிறது?

செல்வம் எப்படி வருகிறது என்று இங்குச் சிறிது ஆராய்வோம். ரூபாய், நோட்டு, தங்கம், வெள்ளி முதலியன செல்வம் என நினைப்பது தவறு. இவைகள் செல்வத்தின் அளவுக்கு ஏற்பட்ட சாதனங்களே. எந்த விதத்திலாவது மனிதனுக்கு உபயோகப்படக்கூடிய பொருள்களே செல்வமாகும். சில பொருள்கள் மனிதன்



உயிர்வாழ இன்றியமையாதவை; மற்றும் சில சுகத்திற்கும், வசதிக்கும் தேவைப்படுகின்றன. உணவு, உடை, வீடு ஆகிய அடிப்படைத் தேவைப் பொருள்கள் இல்லாமல் மனிதன் வாழமுடியாது. இதைத் தவிர மற்றும் பல பொருள்கள் இல்லாமல்கூட மனிதன் சமாளித்துக் கொள்ளலாம். செல்வம் என்ற இப்பொருள்கள் எப்படி உண்டாகின்றன? இவை தானாகவே உற்பத்தியாவதில்லை, ஆகாயத்திலிருந்து கொட்டுவதும் இல்லை. பிறக்கும்போது யாரும் கொண்டுவருவதும் இல்லை. அதற்கு மாறாகப் பிறக்கும்போதே சில தேவைகள்தாம் ஏற்பட்டு விடுகின்றன. இத்தேவைகளைப் பூர்த்திசெய்ய வாழ்நாள் முழுவதும் பூசலாகவே அமைகிறது. இயற்கைச் செல்வங்களில் மனிதன் உடலால் உழைக்கிறான். அப்பொழுது தான் உபயோகமான இப்பொருள்கள் கிடைக்கின்றன. எனவே செல்வத்தின் முக்கிய சாதனங்கள் இரண்டு: (1) இயற்கைவளம், (2) மக்கள் உடல் உழைப்பு. யந்திரங்களில் சில பொருள்கள் ஆவதுபோல் தோன்றுகிறது.

ஆனால் இந்த யந்திரங்களும் உடல் உழைப்பால் ஏற்பட்டவையே. மேலும் அவற்றை ஓட்டவும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, உடல் உழைப்புத் தேவைப்படுகிறது. புத்தியின் உழைப்பால் மட்டுமே உபயோகரமான ஒரு பொருளும் உண்டாவதில்லை; அதாவது உடல் உழைப்பின்றிச் செல்வம் உண்டாகாது என்று ஆகிறது. அப்படியிருந்தும் கடைசியில் செல்வ உடைமையில் உடைப்பாளியின் பங்கு என்ன? நேர்முகமாக உடல் உழைத்து வேலை செய்பவர்கள் ஏழைமையிலும் கஷ்டத்திலும் வாழ்க்கை நடத்த, அவர்களால் உற்பத்தியான செல்வம் வேறு சிலர் கையில் சேர்ந்து கொண்டே போகிறது. உழைப்பாளிகளின் உற்பத்திப் பொருள் வியாபாரிகள் கையிலும் மற்ற தரகர்கள் கையிலும் சிக்கி அந்த கொடுக்கல்—வாங்கலில் சிலர் பணக்காரர் ஆகிறார்கள். வருஷமுழுவதும் உழைத்து குடியானவன் உணவு உற்

பத்தி செய்கிறான். பலமுறை அவனுக்குத் தன் தேவைக்கு வேண்டியதுகூடக் கிட்டுவதில்லை. ஆனால் அதே உணவு தான்யம் வியாபாரிகள் கையில் சென்றதும் அவர்களைச் சீமான்களாக்குகிறது. தொழிலாளியின் உழைப்பின்றித் தொழிற்சாலை நடக்கமுடியாது; ஆனால் தொழிலாளிக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. தொழிலாளிகள் திறமையாக இருந்தால் பணக்காரர்-அறிவாளிகள் இல்லாமலே தொழிற்சாலை நடக்க முடியும். அறிவாளிகளோ, பணக்காரர்களோ தாமாகத் தொழிற்சாலை நடத்தவே முடியாது; அப்படியிருந்தும் அங்கு பணக்காரர்களுக்கும் நிர்வாக அறிவாளிகளுக்கும் தொழிலாளியைவிட எவ்வளவு மடங்கு அதிகப் பணம் கிடைக்கிறது! செல்வத்தைப் படைப்பது தொழிலாளி; செல்வம் சேருவதோ உழைக்காதவர்களிடம்! அவர்கள் உழைப்பையும் தொழிலாளர்களையும் வெறுப்புடனேயே நோக்குகிறார்கள்! இப்படிச் சிலரிடம் செல்வம் சேருகிறது. இவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு ஐந்தோ, பத்தோ இருக்கலாம். ஆனால் உடல் உழைப்பவர் நூற்றுக்கு 90-95. இச்சீமான்களின் செல்வத்திற்கு ஆதாரம் என்னவென்று தேடினால் அது உழைப்பாளியின் உழைப்பு என்று தெரியும்; பணக்காரர்களின் பணம் உழைப்பாளி அல்லது ஏழையின் கையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது புலனாகும். ஏழைகளுக்கு அவர்கள் உழைப்பின் முழுப் பலனும் கிடைப்பதில்லை; அல்லது ஏழைகள் மேலும் பரம ஏழைகளாக, சீமான்களின் செல்வம் பெருகுகிறது. அச்செல்வம் அவர்களின் சொந்த உடைமையாகக் கருதப்படுகிறது! சட்டச் சம்மதமோ, சமூகச் சம்மதமோ எப்படியிருப்பினும் இந்நிலை நியாயமானதாகுமா?

## உழைப்பாளி, அறிவாளி—மேலோன் யார்?

வாழ்க்கை நடத்தவோ, பணம் சம்பாதிக்கவோ பல தொழில்கள் நடக்கின்றன. இவைகளைச் சாதாரணமாக



105981

இரு கூறாக்கலாம். உடல் உழைப்புத் தேவைப்படும் தொழில்; அறிவை உபயோகிக்கும் தொழில். முதலாவதை உழைப்பாளி என்றும் இரண்டாவது அறிவாளி என்றும் சொல்லலாம். ஆட்சி நடத்தும் அமைச்சரும் அரசாங்க நிர்வாகத்தில் பெரிய பதவியிலிருந்து சில்லறை குமாஸ்தா வரையில் இருப்பவரும், நீதிபதி, நியாயவாதி, மருத்துவர், ஆசிரியர், வியாபாரி ஆகிய அனைவரும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள அறிவுத்தொழில் செய்தே வாழ்கிறார்கள். உடல் உழைப்பின் மூலமே தம்மை நிர்வகிக்கும் குடியானவர், தொழிலாளி, தச்சர், கொத்தர், கருமார், சக்கிலி, தோட்டி ஆகியவர் மற்றப் பகுதியைச் சேர்ந்தவராவர். சமூக நடவடிக்கைகளுக்கு உழைப்பாளி அறிவாளி இவ்விருமக்களின் உழைப்புத் தொழிலும், அறிவுத் தொழிலும் தேவை. ஆனால் சமூக நோக்கத்தில் இவ்விரு தொழில்களின் மதிப்பில் அதிக வித்தியாசம் இருக்கிறது. உடல் உழைப்பைப் போலவேதான் அறிவு உழைப்பு என்றும், அறிவு உழைப்பின் பெருமை உடல் உழைப்பை விடக் குறைந்ததாகாது, அதிகமாகவே மதிப்பிடவேண்டும் என்றும் வாதாடப்படுகிறது. ஆனால் சிறிது ஆழ்ந்து யோசிப்போமானால் சமூகக் கருத்தும் இன்றைய நிலையும் வெவ்வேறாக இருக்கும். உடல் உழைப்பவர்கள் திடீரென்று தம் தொழிலை நிறுத்திவிட நிச்சயித்தால் என்ன பலனாகும் என்று கற்பனை செய்து பாருங்கள். மனித வாழ்க்கைக்கு அத்யாவசியமான பொருள்கள் கூட உற்பத்தியாகா; சமூகம் உயிர் வாழமுடியாது. இதற்கு மாறாக அறிவால் உழைப்பவர்கள் தங்கள் தொழிலை விட்டுவிடுவாரானால் சமூகத்தில் ஒழுங்கின்மை சிறிது ஏற்படும்; சமூகம் சிறக்காது. அறிவாளிகள் வாழ்வும் உழைப்பாளிகளின் தொழிலை நம்பியே இருக்கிறது. எனவே சமூகம் நிலைத்திருக்க உழைப்பாளிகள் எவ்வளவு அவசியம் என்று கற்பனை செய்யலாம். அப்படியிருந்தும், தொழிலாளிகளின் ஊதியம், வரும்படி குறைவாகவும், சமூகத்தில்

YZW M95
N56

அவர்களுக்கு மதிப்பு இல்லாமலும் மிகக் கஷ்டப்பட்டுத்
தம் வாழ்க்கை நடத்தவேண்டியும் இருப்பது தெய்வ
சாபமே! குழந்தைகளுக்குப் படிப்பு வசதி, நோய் வந்தால்
மருத்துவ வசதி, ஓய்வு வேளைக்கு கலா நிகழ்ச்சி என்ப
தெல்லாம் இவர்களுக்கு வெகுதூரம். இதற்கு நேர்மாறாக,
அறிவுத் துறையில் உழைப்பவன் ஊதியம் அதிகம்;
சமூகத்தில் பெருமதிப்பு, சுகவாழ்விற்கு வேண்டிய
தெல்லாம் கிடைக்கிறது. இந்த முறையில் தவறு இருப்ப
தாக இன்று சமூகத்திற்குத் தோன்றவில்லை. சட்டமும்
இந்நிலையை ஆமோதிக்கிறது. அப்படியிருப்பினும் இது
நியாயமா?

## அறிவாளிகளுக்கு அதிகப் பணம் சம்பாதிக்க உரிமையுண்டா?

செல்வத்தைச் சேர்ப்பது, பெரும் பணம் சம்பாதிப்
பது என்பதற்குச் சாதகமாக ஒரு வாதம் இருக்கிறது.
அதையும் ஆராய வேண்டும். நம் நாட்டு, வெளி
நாட்டுச் சர்வகலாசாலைகளில் வெகுகாலம் படித்து
ஒருவர் டாக்டர் தொழில் செய்கிறார். நல்ல முறையில்
தொழில் நடக்கிறது. வெற்றிகரமாக தொழில் நடத்
தும் திறமையும் இருக்கிறது. தம் அறிவால் அதிகபக்ஷ
பணம் சம்பாதிக்கத் தமக்கு உரிமை உண்டு என்று
அவர் கருதுகிறார், சமூகமும் கருதுகிறது. தம்
மிஷ்டப்படி பீஸ் (Fees) கேட்கிறார். "கொஞ்சம் குறைத்
துக்கொள்ளுங்கள்" என்று சொன்னால் "எத்தனை
வருஷம் உழைத்துப் படித்துப் பொருள் செலவு செய்து
திறமைசாலி ஆகியிருக்கிறேன். அந்த அளவுக்கு எனக்
குப் பிரதி பிரயோஜனம் கிடைக்கவேண்டாமா" என்பார்.
"நோயாளி ஏழையானால் சிலவேளை ஏதாவது நிவாரணம்
கிடைக்கலாமானாலும் நிவாரணம் கோர ஏழைக்கு உரிமை
யில்லை" என்பார். சட்ட மேதைகளும், இஞ்சினீயர்
களும் இதே நிலையில் இருக்கிறார்கள். புகழ்பெற்ற எழுத்



தாளர், கவி, சித்திரக்காரர், கலாநிபுணர் முதலியவர்
கதையும் இதேதான். வியாபாரி தொழிலதிபர் நிர்வாகி
ஆகியவரும் இதே பல்லவிதான் பாடுகிறார்கள்.

கொள்முதல் மலிவாகவும் விற்பனை கிராக்கியாகவும்
இருக்கவேண்டும் என்ற முறையைத்தான் பொருளாதார
சாஸ்திரம் வியாபாரிகளுக்கும் தொழிலதிபர்களுக்கும்
கற்றுக்கொடுத்திருக்கிறது. லாபத்திற்கு ஒரு எல்லை
யில்லை. தொழிலாளர் உழைப்பின்றித் தொழிற்சாலை
நடக்க முடியாது என்றாலும், அத் தொழிலாளிகளுக்கு
மாதம் நூறு, ஐம்பது ரூபாய்களுக்குமேல் கிடைக்கா
விட்டாலும் அங்கு நிர்வாகிகளுக்கும், முதலாளிகளுக்
கும் ஆயிரம், லக்ஷமாகக் கிடைப்பது ஆக்ஷேபணைக்
குரியது என்று கருதப்படுவதில்லை. "அறிவாளிகள்
எல்லையற்ற செல்வம் சம்பாதித்துத் தம்மிடம் சேர்த்து
வைத்துக்கொள்ள உரிமையுள்ளவர்கள். ஏனெனில் இவ்
வளவு சம்பாதிக்க அறிவும் திறனும் அவர்கள் மிகக் கஷ்
டப்பட்டு அடைந்திருக்கிறார்கள். அவ்வளவு அறிவும் திற
னும் அற்றவர்களுக்கு அதிகப்பணம் கிடைக்கவில்லை
என்றாலும், பட்டினியே கிடக்கவேண்டியிருந்தாலும்,
அதற்காகப் பிறரைக் குறை கூறுவானேன்?" என்பது
தான் இன்று நிலவும் கருத்து.

அந்த ஏழைகளிடத்திலும் அறிவு இருக்கிறது; அவர்
களுக்கு வாய்ப்புக் கிடைத்தால் அவர்களும் மேற்சொன்ன
அறிவாளிகளைப் போலவே திறமைசாலிகளாக முடியும்
என்பதை நாம் எண்ணுவதில்லை. போகட்டும், திறமை
சாலிகள் எல்லையற்ற செல்வம் சம்பாதிக்க உரிமையுள்ள
வர்களா என்று பார்ப்போம். ஒரு குழந்தையை, சிறு
வயதிலேயே எங்கோ ஏகாந்தமாக, மக்கள் தொடர்பே
இல்லாமல் வைத்து வளர்த்தால் என்னாகும்? அவனுக்
குப் பேச்சே வராது, பிறர் பேச்சே புரியாது. அவன்
வாழ்க்கை நடத்த முடியாது. மனித சமூகத்தில் வசிப்ப
தால், சமூகத்தின் கிருபையால்தான் ஒருவன் தன்

வாழ்க்கை நடத்த வல்லவனுகிருன். குழந்தைகளின் ஆரம்பப்பள்ளி முதல் நம் நாட்டு, வெளிநாட்டுச் சர்வகலாசாலை வரைப் படித்துத் திறமையடையும் அந்தப் படிப்பகங்கள் நமக்குச் சொந்தமானவையல்ல. அவை பொதுமக்களிடம் வரிப் பணம் வாங்கும் அரசாங்கம் மூலமோ, அல்லது சிறந்த கொடைவள்ளல் கிருபையாலோ நடைபெறுகின்றன. அவைகளின் செலவைப் பார்த்தால் நாம் கொடுக்கும் சம்பளம் மிகவும் சொற்பமாகும். மேலும் பல ஆயிரக் கணக்கான வருஷங்கள் பல பெரியோர்கள் சலியாது உழைத்து அணு அணுவாகச் சேர்த்துக் கொடுத்திருக்கும் அறிவையே நாம் அப்பள்ளிகளில் பெறமுடிகிறது. வியாபாரியும் தொழிலதிபரும் இப்பள்ளிகளிலிருந்தோ, தன் தோழர்களிடமிருந்தோதான் தம் கலையறிவை அடைகிருர்கள். தனி மனிதன் தன் புத்தியைச் சிறிது உபயோகித்துப் படிப்பது உண்மை. எனினும் அவ்வறிவைப் பெற அவன் செலவிடும் பங்கு மிகக் குறைவு. மேற்சொன்ன சமூக உதவி இல்லையானுல் அவன் விசேஷ அறிவும் திறமையும் அடைய முடியாது. இந்நிலையில், நம் அறிவுக்கும், திறமைக்கும் தன்னுதவி மிகக் குறைவாகவும், சமூக உதவி மிக அதிகமாகவும் இருக்கும்போது, நமக்குக் கிடைத்திருக்கும் அறிவையும் ஆற்றலையும் சமூக நலனுக்கு அதிகமாக உபயோகப்படுத்துவதும் அதற்குக் கைமாருக மிகக் குறைவாகத் தன் நலனுக்கு ஏற்றுக்கொள்வதும் தான் நியாயமானது; நம் கடமையும் அதுவே எனக் கருதவேண்டும். ஆனுல் இதற்கு நேர்மாருக இன்று நடக்கிறது. சமூகத்திற்கு மிகக் குறைவாகக் கொடுத்து, சமூகத்திலிருந்து அதிக பக்ஷம் பெற மனிதன் முயற்சி செய்கிருன்; சமூகத்திற்குக் கொஞ்சம் கூடக் கொடுக்கவேண்டியிராவிட்டால் அதற்காக அவனுக்கு வருத்தமே கிடையாது! பார்க்கப்போனுல், பணம் சம்பாதிக்கும் திறமை தனிப்பட்டவன் இஷ்டத்தை மட்டும் பொறுத்தது அல்ல. அது அப்போது உள்ள



சமூகப் பொருளாதார முறையைப் பொறுத்திருக்கிறது என்பது தெரியும். பொருளாதார சமத்துவக் காலம் வந்துவிட்டால்—அது வரத்தான் போகிறது—பின்பு 'பணம் சம்பாதிக்கும் திறமை' என்ற நம் மமதை காசு, பணம் என்ற உருவத்தில் என்ன பலனளிக்கும்?

## பணம் சம்பாதிக்க புத்தியை உபயோகிப்பது சரியா?

பணம் சம்பாதிக்க புத்தியை உபயோகிப்பது சரியா என்பது ஒரு பெரிய பிரச்னை, அடிப்படை பிரச்னையும்கூட. புத்தியை இவ்வாறு உபயோகிப்பதே பொருளாதார ஏற்றத் தாழ்விற்கு முக்கிய காரணம் என்பது தெளிவு. சுரண்டலும் இதனுல்தான் சாதரணமாக ஏற்படுகிறது. வாழ்க்கையில் பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்விஞல் சுரண்டல் ஏற்பட்டுக் கொந்தளிப்பு உண்டாவதைத் தடுக்க உலகில் பல திட்டங்கள் வந்து, சில அமுலில் இருக்கின்றன. ஆனுல் அஹிம்சாபூர்வமாக இந்தச் சிக்கலான பிரச்னையைத் தீர்க்கவேண்டுமானுல் காந்திஜி அதற்காக வழி வகுத்தார்; "உண்பதற்குக் கைகால் உழைப்பும், அறிவுபெற—அறிவை வளர்க்க புத்தியின் உபயோகமும்" என்ருர். இன்று சமூகத்தில் பெருவாரியான மக்கள் உடலுழைப்பால் நம் வாழ்க்கை நடத்த, பெரும் பணம் படைத்த சிலர் அறிவு உழைப்பால் ஆனந்தமாக வசிக்கிருர்கள். பலரிடம் உழைக்கும் பழக்கமே இல்லை. இந்நிலையில் காந்திஜியின் வழியை அமுல் நடத்துவது ரொம்ப தூரம். நம் குறைபாட்டினுல் இம்முறையைச் சமாளிக்க முடியவில்லையானுலும் அதிலிருக்கும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும்; ஏனெனில், நம் வாழ்க்கைக்குத் தேவையான ஒவ்வொரு பொருளும் மற்ற ஏதாவதொருவர் உழைப்பின்றி உற்பத்தியாகாது. ஆகையால், உடல் உழைக்காமல் அப்பொருளை உபயோகிக்க நியாயமான அதிகாரம் நமக்கில்லை. பணத்தின் உதவி

யால் அப்பொருளை விலைக்கு வாங்குவோமாயினும், பணத்தின் அடிப்படையும் உழைப்புதான். தவிர, புத்தியின் உபயோகம் சமூக நலனுக்கல்லாமல் சுயநலத்திற்காக இருக்குமானால், அந்தச் சுயநலம் தனிமனிதன், தனி ஜாதி, தனி வகுப்பு, தனி தேசம் என்ற அளவில் எப்படியிருப்பினும், அதனால் மற்றவர்களுக்குத் தீங்கே ஏற்படுகிறது என்பதையும் காண்கிறோம். அணுகுண்டும் இப்படிப்பட்ட புத்தியின் உபயோகத்தாலேயே ஏற்பட்டிருக்கிறது!

"உடல் உழைப்பை மதிப்பதுபோல் அறிவு உழைப்பையும் மதிக்க வேண்டும். ஏனெனில் அதில் கைகால்களை ஆட்டாவிட்டாலும் புத்தியின் உழைப்பு இருக்கிறதல்லவா? அறிவு உழைத்துத் தொழில் செய்பவர்களுக்கு அத்துடன் உடல் உழைத்து வாழ்க்கை நடத்த அவகாசம் கிடைக்க முடியாது. உடல் உழைப்பைவிட அறிவு உழைப்பில் அதிக வெற்றி கிடைக்கிறது. அறிவாளிகளால் அன்றி நடைபெறவேமுடியாத சில காரியங்களும் உண்டு" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இன்றைய நிலை அடியோடு மாறாமல் இப்படியே இருக்கும்வரை இந்த வாதத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டியதே. ஆனால் நாம் இங்கு அடிப்படைக் கருத்தை ஆலோசிக்கிறோம். நடைமுறைக்குச் சிறிதுகாலம் ஆகுமாயினும் அதைப் பொறுத்துக் கொள்ளலாம். அறிவு உழைப்பு, உடல் உழைப்பு இவ்விரண்டின் ஊதியத்தில் இன்று காணும் பெரிய வித்தியாசம் ஏன் இருக்கவேண்டும் என்ற பிரச்னை எழுகிறது. அறிவு உழைப்பாளிகள் பழக்க வழக்கம், வாழ்க்கை முறை அதிக வருவாய் இல்லாமல் சமாளிக்கப்பட முடியாது என்றால் இப் பழக்க வழக்கம் ஏன் வந்தது? அதை இப்பொழுதாவது சீர்திருத்தக்கூடுமா, கூடாதா? திருத்தியமைக்க மனதார ஏன் முயற்சிக்கக் கூடாது? இப்படிப்பட்ட பலவீனங்கள் இருக்கும்வரை, குடும்பத்திலே பலவீனமானவருக்கு விசேஷச் சலுகை



கிடைப்பதுபோல், சமூகத்தில் சிலருக்குச் சில சலுகைகள் கிடைத்தபோதிலும் இன்றைய ஏற்றத்தாழ்வை இப்படியே ஆமோதிக்க முடியுமா?

## பணக்காரர் தர்மகர்த்தாவாகவேண்டும்

"செல்வத்தின் சிறு பகுதியைச் சொந்த உபயோகத்திற்கு ஒதுக்கி, பெரும் பகுதியைப் பெரும் மூலதனம் போட்டு நடத்தும் பெரிய தொழிற்சாலைகளில் ஈடுசெய்து சமூகத்திற்கு வேண்டிய உபயோகமான பொருள்களை உற்பத்தி செய்வதில் செலவழிக்கிறோமே. எங்கள் இந்த முயற்சியால் பலருக்கு வேலையும் வாழ்க்கை வசதியும் கிடைக்கிறதே. ஒரு வகையில் நாங்களும் சமூக சேவையே செய்கிறோம். தனி நபரிடம் பெரும் பணம் சேராவிட்டால் இம் முயற்சிகள் எப்படிப் பலனடையும்? சமூகத்தில் பல காரியங்கள் நின்றுவிடுமே" என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

ஏழைகளுக்கு வாழ்க்கை வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்ற வாதத்திற்கு பதில் இதுவே: இந்த ஏழைகளின்றிச் சீமான்களின் தொழிற்சாலையோ, தொழிலோ நடக்க முடியாது என்பதால் ஏழை உழைப்பாளிகளின் உதவியே பெரும் லாபமடையும் சீமான்களுக்கு வாழ்க்கை வசதியளிப்பதாகும். அரசாங்கம் மூலமோ, கூட்டுறவு மூலமோ இத்தொழில்கள் நடக்காதவரையில் பணக்காரர்களுடைய மற்ற வாதங்கள் செல்லுபடியாகலாம். இதை இங்கு விஸ்தரிக்க வேண்டாம். பணக்காரர்கள் போக்கு எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்தோம். "எங்கள் பல்வேறு முயற்சியின் பலன் சமூக நன்மை" என்று கூறும் பணக்காரர்களிடம் நேரான கேள்வி இதுதான்: "உங்கள் முயற்சி சுயநலனுக்கா, சமூக நலனுக்கா?" சுயநலமே நோக்கமாயினும், மற்றவருக்கும் சிறிது லாபம் கிடைப்பது என்பது அவரவர் பாக்கியம் என்றுதான் உண்மையாக பதில் கூறமுடியும். நாட்டு நலனுக்காகவே

இம்முயற்சி என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கதே. அப்படியானால் அவர்களது சகல காரியத்திலும் நேர்மை வேண்டுமென்று சொல்லுகிறோம். பணக்காரர்கள், தர்மகர்த்தா என்ற முறையில் தம் பெரும் பணத்தைச் சமூக நலனுக்கு உபயோகிக்கவேண்டு மென்றுதானே மகாத்மாஜியும் சொன்னார். சம்பத்து தான யக்ஞம், பூமி தான யக்ஞம் இவைகளின் நோக்கம்தான் என்ன? தன் தேவைக்கு அதிகமாகத் தன்னிடம் இருப்பதைத் தன் உடமை என்று கருதாமல் மற்றவர்களுக்காக உபயோகிப்பதுதான்.

## தானத்தில் குறைபாடு

“சீமான்களின் நன்கொடையால் ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் போன்ற சமூக நலனுக்கு உபயோகமான பல வேலைகள் நடக்கின்றன. தனி நபரிடம் செல்வம் சேராவிட்டால் சமூகத்திற்கு இந்த லாபம் எப்படிக் கிடைக்கும்?” என்ற கேள்வி எழுகிறது. உண்மையில் இவ்வேலைகளைச் செய்ய அரசாங்கம் இருக்கிறது. செல்வம் சிலர் கையில் குவியாது சமூகத்தில் பரவியிருந்தால் கூட்டுறவு முறையில் பெரும் அளவிற்கு இவ்வேலைகள் சுலபமாகவே நடக்கத் தொடங்கும். அப்போது இதனால் லாபமடைபவர்கள் இன்றிருப்பதுபோல் கெஞ்சிக் கேட்கும் எளியோர் ஆகாமல் பலனடைவதில் கவுரவப்படுவார்கள். பணக்காரர்களின் நோக்கில் பார்த்தாலும்கூட, கோடிக் கணக்கான செல்வம் சேர்த்து அதில் சில லக்ஷம் தானமாகச் செலவு செய்வதாலேயே மற்றவர் பங்குப் பொருளைத் தம்வசம் சேர்த்து வைத்துக்கொண்ட குற்றத்திலிருந்து பணக்காரர்கள் தப்பமுடியாது. சரியோ, தப்போ எவ்வகையிலும் பெரும் பணம் சேர்த்து அதில் ஒருபங்கு தானம் செய்வது முழுப் பிராயச்சித்தமாகாது. பணக்காரர்களின் நன்கொடை முறையை எங்கும் பார்க்கும்போது அதில் தூய்மையான தானம் எவ்வளவு என்று



தெரிவது கஷ்டம். எங்குப் பார்த்தாலும் பேரும், புகழும், சுயநலமுமே நோக்கமாகக் காட்சியளிக்கின்றன. சில வேளை நன்கொடைபேரம் வியாபார பேரத்தைவிடக் கடுமையாக இருக்கிறது. ஒரு லக்ஷம் நன்கொடை அளித்து ஒரு கோடி கீர்த்தி சம்பாதிக்க ஆசைப்படுகிறோம். தூய சாத்வீகமான தானம் மிகவும் அரிது.

## தலைவிதி வாதம்

பிற நாட்டிலும், பிற மதத்திலும் இல்லாத ஒரு முக்கிய விஷயம் இந்தியாவில் இருந்து வருகிறது. அது தலைவிதி வாதம். ‘முன் பிறப்புகளில் செய்த புண்ணியத்தின் பலனாக இப்பிறப்பில் சம்பத்தும் சுகமும் கிடைக்கின்றன; பாபம் செய்தவன் ஏழைமையும் கஷ்டமும் அனுபவிக்க வேண்டும். இந்நிலையில் ஒருவர் பிறரைக் குறை கூறுவானேன்?’ என்று கருதப்படுகிறது. இப்படி சர்ச்சை நடந்தும் நாம் அதைப் பூர்ணமாக நம்புகிறோமா? உண்மையாக இதை நம்பினால் சரி, நாம் இதற்காக வருந்தவேண்டாம். முற்பிறவியோடு இப்பிறவி தொடர்பு கொள்ளுகிறது என்றால் இப்பிறவியோடு பிற்பிறவிகளும் சந்தேகமின்றித் தொடர்புள்ளனவாகவே வேண்டும். இப்பிறவியில் நம் பாக்கியப்படி கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி, அடுத்த பிறவிக்குச் சரியான ஏற்பாடு செய்துகொள்வது நம் கையில்தான் இருக்கிறது. அடுத்த ஜன்மத்தில் சுகம், சௌகரியம் கிடைக்க வேண்டுமானால் இந்த ஜன்மத்தில் புண்ணியமே செய்ய வேண்டும். இவ்விஷயம் நன்கு பரவுமேயானால் மேலும் வேறு என்ன வேண்டும்? சமூகத்தில் சுகமும், அமைதியும் வேரூன்றும். ஆனால் இந்த பாக்கியத்தை நம்பி யாரும் வாளாவிருப்பதைக் காணோம். உயிரை மாய்த்து உலக விவகாரங்களைப் பெருக்கிவருகிறான். செல்வம் சேர்ப்பதில் பாபம், புண்ணியம் என்ற எண்ணத்தையே பலர் மறந்துவிட்டனர். பெருவாரியாக அநீதி பரவுகிறது

என்று இரவு பகலாகக் குறைகூறுகிறோமே, இது எதைக் காட்டுகிறது? இந்த அநீதியும் பாபமும் ஏழைகளே செய்கிறார்கள், பணக்காரர்கள் செய்வதில்லை என்று கருதுவதும் தவறு. உண்மையில், பணக்காரர்களின் பாபம் குறைவானது அல்ல. பணக்காரர்கள் தாம் பணம் சம்பாதிக்கும்போது பாபத்திற்கு பயப்படுவதில்லை என்னும்போது, அவர்கள் தலைவிதி வாதம் பேசுவதை மனதாறப் பேசுகிறார்கள் என்று எப்படி ஏற்பது? இத் "தலைவிதி" வாதம் இருந்தாக வேண்டுமானால் ஏழைகளும், தங்கள் தலைவிதி மாறிவிட்டது என்றும், சீமான்கள் செல்வங்களைக் கொள்ளையடித்துத் தம் தலைவிதியைத் திருத்துவதில் தடையொன்றும் இல்லையெனத் தம் தலைவிதி தமக்குக் காட்டுகிறது என்றும் சொல்லக்கூடும். இவ்வகையில் தலைவிதி வாதம் இருபக்கமும் கூர் உள்ள வாள் ஆகலாம். சீமான்களைவிட ஏழைகள் அதிகமாகையால் பணக்காரர்களுக்கு இது ஆபத்தானதாகும். ஏழைகளை அவர்கள் தலைவிதிப்படி விட்டுவிடுவது அபாயமானது; வெகு காலமாக அவர்களை அசட்டை செய்து விட்டோம். இப்போது லக்ஷ்மீநாராயணனுக்கு பதிலாக தரித்திர நாராயணனை வழிபடவேண்டும்.

## சுயநலத்தின் இடம்

"தனிப்பட்டவர் சுயநலத்திற்கு வாய்ப்பு அளிக்காமல் நாட்டின் உற்பத்தியும் செல்வமும் பெருக முடியாது, சிக்கனமும் இருக்கமுடியாது என்கிறார்கள்" பொருளாதார நிபுணர்கள். மனிதனிடம் சுயநல உணர்வு இருப்பதாக ஏற்றுக்கொள்வோம். ஆனால் பணக்காரர்கள் மட்டுமே இந்தச் சுயநலச் சர்ச்சை செய்வார்களானால் அவர்களுக்குக் கீழ்க்கண்ட பதில் போதுமானது: சமூக நலனும் தனி நபர் நலனும் முரண்பட்டால் தனி நபர் நலனுக்கு மகத்துவம் கொடுக்க முடியாது. பொருளாதார நிபுணர்கள் பெரிய மூலதனத்தைச் சேர்ப்பது அவசியம் என்



கிறார்கள். ஆனால் சர்வோதய சமூகத்தில் மூலதனத்தை விட மனிதனுக்கு மதிப்பு அதிகம். பரவல் முறை உற்பத்தியிலும், கேந்திர சுய தேவைப் பூர்த்தியிலும் மனித பலத்திற்கும், உடல் உழைப்பிற்குமே மகத்துவம் உண்டு. சிறிது மூலதனம் இருந்தால் போதும். சில பொருள்களுக்காகப் பெரிய தொழிற்சாலைகள் நடத்தத் தேவைப்பட்டாலும் அவற்றை அரசாங்கம் மூலமாக நடத்தலாம். நாட்டில் இன்று அரசாங்கத்தின் மூலமாக தொழிற்சாலை நடத்தக்கூடிய நிலை தோன்றிவிட்டாலும் அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தாதவரை நாட்டிற்கு நலன் இல்லை. மூலதனம் ஏழைமையையோ, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையையோ தீர்க்க முடியவில்லை என்று இதுவரை நம் அனுபவம் சொல்லுகிறது. நியாய நோக்குடன் பார்த்தாலும் சுயநல எண்ணத்தை ஆமோதிப்பது சரியல்ல. சுயநலம் என்றாலே பிறர் நலக்கேடு என்றாகிறது. இதிலிருந்து போட்டி உண்டாகி, அதன் பலனைச் சிலர் லாபமடையலாம், பெரும்பாலாரோ கேடுறவேண்டியே இருக்கும். மனித நியாயமான ஒத்துழைப்பில்லாமல் காட்டு நியாயமோ (Law of the Jungle), மச்ச நியாயமோ (ஒன்றை ஒன்று அடித்துத் தின்பது) நடந்து வருகிறது. சமூகத்திற்கு எம்முறையில் நன்மையுண்டு என்றுதான் பார்க்கவேண்டும். சமூகத்தில் சுயநல எண்ணமுள்ளவர்கள் நிறைந்திருந்தால் நன்மையை எதிர்பார்க்கலாமா? சமூகம் முன்னேற வேண்டுமானால் அது பரோபகார எண்ணத்தால்தான் முடியும். பணத்தைப் பெருக்கச் சுயநலத்தை ஆதாரமாகக் கொள்வது குற்றமாகும்.

## கொடையாளி எளியவன் ஆக நேர்ந்தால்—

பொருளாதார தத்துவம் என்றால் அமெரிக்காவை உதாரணமாகக் காட்டுகிறார்கள் சிலர். இந்தியாவை "க்ஷேமநல" (Welfare State) நாடாக்கும் பேச்சு

நடக்கிறது. க்ஷேமநல நாடு என்றால் சகல பலஹீனர் களுக்கும் அரசாங்க உதவி கொடுக்கலாம் என்று பொருள் படுகிறது; அதாவது, பெருவாரியாக வரி வசூல் செய்து ஏழைகளுக்கு உதவியளிப்பது என்பதாம். இந்தியாவைப் போல ஏழை நாட்டில் இவ்வாறு நடக்க முடியுமா? இதற்கு பதிலாக, மக்கள் ஆரோக்கியத்திற்கும் கல்விக்கும் வழி செய்வதானால் அந்த அரசாங்க முறை க்ஷேமநலன் கருது வதாக இருக்கும். ஆனால், பொருளாதார விஷயத்தில், அதாவது சோற்றுக்கு வழி செய்ய அரசாங்கத்தையே நம்பியிருப்பது எவ்வளவு தூரம் சரியாகும்? அடிப்படைத் தேவைகளுக்குத் தன் முயற்சியையே நம்பியிருக்காத மனிதன் சுதந்திரமாக வாழ முடியாது; எந்த வகையிலும் அவன் பிறர் ஆதிக்கத்திற்கு உள்ளாகி விடுவான். அமெ ரிக்கா போன்ற நாட்டின் உதாரணம் நமக்கு உதவாது. அகில உலகச் செல்வமும் சேகரிக்கப்பட்டு அங்கே குவிந் திருக்கிறது; அங்கு ஏழைகளுக்கும் போதிய வசதி கிடைக்கிறது. எனவே இன்றைய நம் நிலையில், அல்லது நாம் எதிர்பார்க்கக்கூடிய வருங்கால நிலையில் அந்த உதாரணம் என்ன பிரயோஜனம்? நம் நாட்டிலோ பிரதி வருஷமும் ஏதாவது ஓர் இடத்தில் கோடிக்கணக்கானவர் பஞ்ச நிலையில் காலம் கழிக்க நேரிடுகிறது. பண்டக சாலைகளில் உணவுப் பொருள் நிறைந்திருந்தும் சில மாகாணங்களில் பெருவாரியான மக்கள் பட்டினிச்சாவைச் சமாளிக்க வேண்டி வருகிறது. ஏழைகளிடம் உணவுப் பொருள் வாங்கப் பணமில்லை; வேலைசெய்ய வாய்ப்பு இல்லாததால் பணம் கிடைப்பதில்லை. பணக்காரர்களின் குவியல் முறைத் தொழில்களால் வேலையற்றவருக்கு கிராமக் கைத்தொழிலும் கிடைப்பதில்லை. பஞ்சம் போன்ற நிலையில் க்ஷேமநல அரசுமாதிரி அரசாங்கமும், நன்கொடையாளர்களும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கச் சில முறைகளை வகுப்பது சரியே. ஆனால் அது போதுமா? பட்டினியால் வாடும் மக்களிடையே சிலர் கஞ்சி வார்ப்



பதும் அதைச் சிலர் பெற்றுக்கொள்ளுவதும், அதேபோல் இரக்கமுள்ள சிலர் துணி விநியோகிப்பதும் அதைக் கந்தை உடுத்துவோர் வாங்கிக் கொள்ளுவதுமான காட்சி யைப் பாருங்கள்!

பத்திரிகைகளில் இந்தப் படங்கள் வருகின்றன. இக்காட்சிகள் மனிதன் மனத்தில் உறுத்தாவா? ஒருவன் பொருளை விநியோகிக்கும் நிலையிலும் மற்றவன் அதைப் பெறும் கஷ்டமான தீன நிலையிலும்! விநியோகிப்பவன் அந்தப் பொருளை அடைய எளியவன் ஆசிக் கை நீட்டும் நிலையில் இருந்தால்தான் இதன் மர்மத்தை அறிய முடியும். சுயராஜ்யம் அடைந்த பின்பும் இந்நிலை எது வரை நீடிக்கும்? ஒவ்வொருவருக்கும் நியாயமான உணவு, உடை, உறைவிடம் கிடைத்த பிறகு மீதியிருக்கு மானால் அதைப் பணக்காரர்கள் தம்மிடம் வைத்துக்கொள் ளட்டும். அதிலும் ஆக்ஷேபணை உண்டு. ஏழைகளைச் சரியானபடிப் பராமரிக்காதவரை பணக்காரர்கள் நிம்மதி யாக இருக்கக்கூடாது. மாளிகையில் வசிப்பவர்கள் தம் மாளிகைக்கு எதிரிலேயே நடைபாதையில் வீடுவாசலற்ற வர் இரவு பகலாக ஏன் வாழ்வைக் கழிக்க நேரிடுகிறது என்று யோசிக்கவேண்டும். மோட்டாரில் சவாரி செய்ப வர்கள் அதே பாதையில் அறுபது, எழுபது வயதான ஆண் பெண் தம் தலையில் விறகோ, புல்லோ சுமந்து போக நேரிடுகிறது ஏன் என்று நினைத்துப் பார்க்கவேண் டும். இவ்விஷயங்களை ஆராய்ந்தால் தம்மிடம் அதிகச் சொத்து வைத்துக்கொள்ளத் தமக்கு உரிமை உண்டா என்ற கேள்விக்குப் பதில் வெட்ட வெளிச்சமாகும்.

## நாடே குடும்பம்

ஐந்துபேர்கொண்ட ஒரு குடும்பம்; அவர்கள் சோற் றுக்கு ஒருபடி அரிசி அவசியம் என்று இருக்கட்டும். ஒரு படியே கிடைத்தால் எல்லோரும் வயிறு நிறைய உண்ண லாம். முக்கால்படி மட்டும் கிடைத்தால் என்ன செய்வர்?

ஒருவரிருவரைப் பட்டினி போட்டு மற்றவர்கள் வயிறார உண்பார்களா? குடும்பத்தில் இப்படி நடக்காது. தேவைக்கும் குறைவாகக் கிடைத்தால் எல்லோரும் கொஞ்சம் கொஞ்சம் குறைவாக ஏற்றுச் சமாளிப்பார்கள். குழந்தைகளையும், பலஹீனமானவர்களையும் முதலில் கவனிப்பார்கள். சமூக நோக்கத்தில் இதே நியாயம் சமூகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொருந்தவேண்டும். அரசு செலுத்துபவரும், சமூகமும் "நாடு ஒரு குடும்பம்" என்ற நோக்கம் கொள்ளவேண்டும். நாட்டில் செல்வம் அதிகமிருந்தால் அதை அனைவரும் முழுவதும் அனுபவிக்கட்டும்; செல்வம் குறைவு என்ற நிலையில் ஒவ்வொருவரும் சிறிது கஷ்டத்தைப் பொறுக்கவும், சிறிது தியாகம் செய்யவும் தயாராக வேண்டும். தர்மமும் இதையே கற்பிக்கிறது. என்ற வேதாந்த தத்துவம் நம் வாயில் குடிகொண்டிருக் "நான்–பிறர் என்ற பேதம் தவறு, அனைவரிடமும் ஆத்மா சமமே; கடவுள் அனைவரையும் படைத்தார், நாம் அனைவரும் சகோதர–சகோதரிகள், சரிநிகர் சமமே" கிறது. இவ்வுண்மைக் கருத்துக்களை எப்போதும் நம் வாழ்க்கை நடைமுறையில் இணைக்க முயற்சி செய்ய வேண்டும்.

## உடலுழைப்பில் வெறுப்பு

உடல் உழைப்பு விஷயமாகப் பிறநாடுகளில் இல்லாத ஒரு சமூக எண்ணம் நம்மிடம் பெரும் குறையாக இருக்கிறது. நாம் உடலால் உழைக்க விரும்பவில்லை. அது மட்டுமல்ல; உடல் உழைப்பை வெறுப்புடன் நோக்குவதோடு, உடல் உழைக்க நேரிடுபவனைச் சமூகத்தில் கீழ் நிலையானவன்என்றும் கருதுகிறோம். சீமானோ, ஏழையோ, யாரும் உடல் உழைக்க விரும்புவதில்லை. பணக்காரன் தன் பணத்தின் பலத்தால் வேலைக்காரர்களைக் கொண்டு காரியங்களைச் சமாளிக்கிறான். ஏழையோ, பட்டினியிருக்க நேரிடுமே என்று வேறு வழியின்றி உழைக்கிறான். இந்த



முறையை மாற்றவேண்டும். உடல் உழைப்புக்கு கவுரவம் மட்டும் ஏற்படுத்திவிட்டுத் திருப்தியடையக் கூடாது; அதனிடம் நம் மனதில் ஆசை ஏற்பட வேண்டும். பணக்காரர்களும், மத்யதர வகுப்பினரும் உடல் உழைப்பிற்குத் தாங்கள் உதாரணமாக, மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கவேண்டும்.

## பொருளாதார ஏற்றத் தாழ்வு போகாமல் வழியில்லை

உடலுழைப்பில்லாமல் செல்வம் உண்டாவதில்லை, பணக்காரரிடம் சேர்ந்திருக்கும் செல்வம் ஏழைகளின் உடல் உழைப்பின் பலன்தான் என்று முதலில் சொல்லப் பட்டது. தவிர, ஏழைகள் ஒத்துழைக்காமல் சீமான்கள் செல்வம் சம்பாதிக்க முடியாது; தம்மிடம் சேர்த்துவைக்கவும் முடியாது; அதை உபயோகிக்கவோ, அனுபவிக்கவோ இயலாது. நியாய நோக்குடன் பார்த்தால், தேவைக்கு மேலாகச் செல்வம் வைத்துக் கொள்ளவும், சம்பாதிக்கவும் ஒருவருக்கும் அதிகாரம் இல்லை என்று தீர்ப்புக் கூற வேண்டும். 'தேவையின் அளவு என்ன?' என்ற கேள்வி எழுகிறது. மனிதன் மனிதன் என்ற முறையில் இதில் அதிக வித்தியாசம் ஏற்படக்கூடாது. நோயாளி - திடகாத்திரன், குழந்தை-வாலிபன், மேலும் தங்கள் தங்கள் மாறுபட்ட பழக்கம் காரணமாகவும் கொஞ்சம் வித்தியாசம் ஏற்படலாம். அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். நியாய நோக்குடன் பார்த்தால் தேவைகளைப் பற்றி நிர்ணயிப்பது கஷ்டமில்லை. தன் சுயநலம், உலக மோகம், பண ஆசை ஆகிய தோஷங்கள் தலைவிரித்தாடும்போதுதான் இப்பிரச்னை சிக்கலாகிறது. தேவை என்பது பற்றி இங்கு ஆழ்ந்து பார்க்கத் தேவையில்லை. இன்றைய சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வு கொடுமையானது, நியாயமற்றது என்பது போதும். இதை மாற்ற வேண்டும். இந்தக்காலத்தின் கோரிக்

கையைத் தள்ளிப்போட முடியாது. இந்த வேற்றுமை ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது; பல ஆயிர வருஷங்களாக இருக்கிறது. சாதுக்களும், மகாத்மாக்களும், எல்லா மதத்தவரும் எப்போதும் உபதேசம் செய்தது இதுவே: "ஏழைகளைக் கவனி. தன்னிடம் அதிகமாய் உள்ளதைப் பிறருக்குக் கொடு." தானம், தர்மம், பிச்சை என்ற எவ்வளவோ முறைகள் இருந்தும் ஏழைமைப் பிரச்னை தீர்ந்தபாடில்லை. மேற்கூறிய வழிகளால் இது தீரும் என்று தோன்றவுமில்லை. இப்போது சிலகாலமாக உலகத்தில் கருணை என்ற இடத்தில் சமத்துவம் என்ற கருத்து உலவி வருகிறது. பரிபூரண சமத்துவம் ஏற்படுவது கஷ்டமாயினும், தற்போது உள்ள ஏற்றத் தாழ்வைப் பொறுத்துக்கொள்ள முடியுமென்று தோன்றவில்லை. இவ்வேற்றுமை எப்படிப் போகும்? சில இடங்களில் மக்கள் பலாத்கார முறையைக் கையாண்டனர். அதனால் ஏற்பட்ட தீமைகளை இதுவரைத் தீர்க்க முடியவில்லை. ஏற்றத் தாழ்வைப் போக்கச் சட்டமும் சிறிது உதவுகிறது. சில அம்சங்களில் நம் நாட்டிலும் இம்மாதிரிச் சட்டங்கள் அமுலில் இருக்கின்றன. ஆனால் சட்டங்கள் மூலம் மனிதனது இயற்கை குணங்களும் நல்ல எண்ணமும் வளர முடியாது. நாம் பிரத்யட்சமாக ஆராய்ந்த வகையிலும் இந்தியப் பரம்பரை எவ்வாறு இருக்கிறது என்று நோக்குங்கால் இங்கு ஏற்றத் தாழ்வுப் பிரச்னையை வெகுவாகத் தீர்க்க வல்லது மகாத்மாஜி நமக்கு அளித்த அஹிம்சைக் கருத்து முறைதான் என்று படுகிறது. இதில் பணக்காரர்களின் பூர்ண ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும். அவர்கள் மனம் மாறவேண்டும். இதன் பிரபாவம் சட்டம் வகுக்கும் சக்தியில் பிரதிபலிக்கும்; நம் எல்லாச் செயல் துறையிலும், சமூகத்திலும் நற்குணங்கள் வளரும். அரசியல் சுதந்திரப் பிரச்னை பெரிய அளவுக்கு அஹிம்சா மார்க்கத்தில் தீர்ந்தது போலவே பொருளாதார-சமூக சமத்துவப் பிரச்னையும் இந்தியாவில்



அஹிம்சை முறையில் தீரும் என்று நாம் நம்பலாம். விநோபாஜி நடத்தி வரும் பூமிதான யக்ஞத்திலும், சம்பத்துதான யக்ஞத்திலும் சிறியவர்-பெரியவர், ஏழை-பணக்காரன் அனைவரும் மனப்பூர்வமாக ஒத்துழைப்போமாக.

## ஏழைகளிடமிருந்தும் ஏன் தானம்?

பூமிதான யக்ஞத்தில் பெரிய நிலப்பிரபுக்களிடம் அதிக நிலம் தானமாக எதிர்பார்க்கப்படுவதுடன், கொஞ்ச நிலமுள்ளவர்களிடமும் அவர்கள் ஏதாவது சிறிது கொடுக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. ஒப்பிட்டுப் பார்த்தால், கொஞ்சம் நிலமுள்ளவர்களே அதிக தாராளமாக இருக்கிறார்கள் என்பது அனுபவபூர்வமாகத் தெரியும். பூமிதான யக்ஞத்தைப்போல் சம்பத்து தான யக்ஞத்திலும், ஒவ்வொருவரும் தம் சக்திக்கு ஏற்றவாறு தன் வருவாயில் ஒருபங்கு கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'குறைந்த வருவாய் உள்ளவர்கள், ஏழைமையிலேயே வாழ்க்கை நடத்தவும் வசதியில்லாமல், தம் வரும்படி கொஞ்சம் பெருக ஏதாவது வழிசெய்ய வேண்டுமே என்று இருக்கும்போது அவர்களிடமிருந்தும் சம்பத்து தானம் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது ஏன்?' என்ற ஒரு சந்தேகம் எழக்கூடும். தானம் கொடுக்க வேண்டுமென்று யாரிடமும் கட்டாயப்படுத்தவில்லை. கொடுப்பது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. கொடுப்பவர் சந்தோஷமாகக் கொடுத்தால் ஏன் வாங்கிக்கொள்ளக் கூடாது? ஏழைமையின் அனுபவம் ஏற்பட்டிருப்பதால் ஏழைகள் இந்த யக்ஞத்தில் மிக உற்சாகமாகப் பங்கு கொள்கிறார்கள் என்று தோன்றுகிறது. யாகத்தில் ஆஹுதி செய்ய ஏழை பணக்காரர் அனைவரையும் அழைக்கிறோம். இப்படிப்பட்ட உலக யக்ஞத்தில் எல்லோரும் சேருவது அவசியம். ஏழைகள் தானம் வழங்கும் முறையை ஆரம்பித்துவிட்டால் பணக்

காரர்களும் வெகுவாக அதில் சேர்ந்து விடுகிறார்கள். பணக்காரர்களே உண்மையில் இப் பணிக்குத் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவர்கள் கொடுக்கவேண்டி வரும் நிலமும் சொத்தும் பெரும் அளவு இருக்குமாகையாலும், பெரும் பொருள்களில் பற்று அதிகம் ஏற்படுவதாலும், அவர்கள் மனத்தைத் தேற்றித் தீர்மானம் செய்யச் சிறிது தாமதம் ஆகிறது. எனவே ஏழையோ பணக்காரனோ, உள்ளத்தில் உற்சாகம் உடையவன் தானம் வழங்கத் தயாராக இருக்கவேண்டும். எல்லோரையும் இந்த யக்ஞத்திற்கு அழைக்க மற்றொரு காரணமும் உண்டு. தற்போது சமூகத்தில் சுயநல எண்ணம் அதிகரித்து நேர்மையற்ற காரியம் நடந்து வருவதை ஒருவாறு அடக்கவேண்டும். இந்த யக்ஞத்தில் பங்குகொள்பவர் நேர்மை-நேர்மை யற்றது என்ற உணர்வைப் பெறுவார். சுயநல எண்ணம் ஏழை பணக்காரன் எல்லோரிடமும் இருக்கிறது. எல்லோர் மனதையும் திருத்துவ தவசியம். சுயநல எண்ணம் குறையாமல் சமூக மேன்மை ஏற்படாது. இந்த தானத்தில் அனைவரும் பங்குகொண்டால் தேசீய வாழ்க்கை தூய்மையடையும்; நற்குணங்களையும் ஒரு மனிதனைப் பார்த்துப் பார்த்து மற்றவன் கற்றுக்கொள்கிறான். பொருளாதார சமத்துவம், உடல் உழைப்பு சுயதேவையின் பூர்த்தி ஆகியவைகளின் பெருமையை அறியவும், ஒருவன் மற்றவன் கஷ்ட சுகங்களைக் கவனிக்கவும், ஒற்றுமை எண்ணம் வளரவும், எல்லாருடைய சுயநலமும் குறையவும் வேண்டுமானால் சிறியோர், பெரியோர் அனைவரும் தம் சக்திக்குத்தக்கவாறு, இந்த யக்ஞத்திற்கு உதவவேண்டும்.

## பணத்தாசை குறையவேண்டும்

ஏழைகளுக்கு உதவ வேண்டியது உண்மை. அவர்களுக்கு உதவவே இந்த யக்ஞங்களில் அவர்களிடமிருந்தும்



கொஞ்சமாவது தானம் கோரப்படுகிறது என்றால் அவர்களுக்கும் பண ஆசை குறையவேண்டும் என்பதற்கே. இன்று நம் பொருளாதாரத்தின் அடிபடைக் குறையயை ஏழைகளும் உணரவில்லை. அவர்களுக்குப் பணக்காரர் ஆக வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் பலனடைய விரும்புவார்கள். பணக்காரனோ ஏழையோ, மத்யதர வகுப்பினனோ, யாராய் இருந்தாலும் சரி, அனைவருக்கும் பணக்காரன் ஆகவேண்டும் என்ற ஆசைதான். பணக்காரரில்லாமல் பணக்காரர்களைக் குறை கூறுபவரும் தாம் பணக்காரனாகவேண்டும் என்றே விரும்புகிறார். எங்குப் பார்த்தாலும் பணத்திற்காகவே ஆட்டபாட்டம். தொழிற்சாலைகளில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் எப்போதும் போராட்டம். ஏழைகளின், உழைப்பாளிகள் நிலையைச் சீராக்கி அவர்கள் வருவாயைப் பெருக்குவது அவசியமே. ஆனால் அவர்களுடைய நோக்கம் தம் சீர்திருத்தத்தைவிட அதிகப் பணம் சம்பாதிப்பது என்ற வழியிலேயே இருந்துவருகிறது. நாட்டில் நம்மைவிட அதிக ஏழைகள் பலர் இருக்கிறார்களென்றும் இந்தத் தொழிற்சாலைகள் காரணமாகவே யற்றவர்களிடம் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகிறது என்றும் அவர்கள் எண்ணுவதில்லை. முதலாளிகளைப் போலவே தொழிலாளிகளும் தம் தொழிற்சாலையில் அதிக லாபத்தை வரவேற்கிறார்கள். ஏனெனில், அந்த லாபத்தில் அவர்களுக்கும் கொஞ்சம் பங்கு கிடைத்துவிடுகிறது. இவ்வாறு, பொருள்களை வாங்கி உபயோகிக்கும் ஏழையின் நலனைக் கருதாது இலாப நோக்கமே தொழிற்சாலையில் காணப்படுகிறது. சமூகத்திலே எல்லா வகுப்பு மக்களிடமும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்தவேண்டும். இவ்வுண்மையை அறிந்து ஒவ்வொருவரிடமும் தியாக எண்ணத்தை வளர்க்கவேண்டும். இந்த யக்ஞங்கள் இதற்கு உதவும். நல்ல முறையில் உணர்ந்து, மன மாறுதல் ஏற்பட்டு, இச்

சூழ்நிலை பரவுமானால் பணக்காரர்களும் இதிலிருந்து தள்ளிநிற்க முடியாது.

## தனி நபர் சொத்து உரிமை

பணம் சம்பாதிப்பது என்பது இருக்கட்டும். சமூக ஒத்துழைப்பும், உதவியும் இன்றி மனிதன் உயிர் வாழவும் முடியாது என்பது நன்கு ஆலோசித்தால் தெரியும். சொந்த ஆற்றலில் யாருக்காவது கர்வம் ஏற்படுமானால் அவன் காட்டில் தனியாக வாழ்ந்து பார்க்கட்டும். மனிதன் சமூகத்தில் வசிக்கிறான், ஒருவன் மற்றவனுக்கு உதவியாகிறான்; அப்போது தான் வாழ்க்கை நடத்த முடிகிறது. ஏழைத் தொழிலாளிக்கும் எஜமானன் சில வேலை கொடுப்பதனால்தான் வயிறு நிறைகிறது. எஜமானன் வேலையும் தொழிலாளியின் உதவியால் நடைபெறுகிறது. வியாபாரிக்கு, ஒருவன் விற்கிறான், அவனிடம் மற்றவர்கள் வாங்குகிறார்கள் என்பதால்தான் வியாபாரம் நடைபெறுகிறது. தொழிற்சாலைகளிலும் பலவித மக்கள் ஒத்துழைப்பதால் தொழிற்சாலை நடக்கிறது. நோயாளிகளால் வைத்தியருக்கு வருமானம்; சொத்துச் சச்சரவால் வக்கீலுக்கு வாழ்க்கை. இப்படிப் பல தொழில்களும் பரஸ்பர ஒத்துழைப்பால் நடப்பதால் மனிதனுக்குப் பிழைப்பு நடக்கிறது. உடல் பலமும், புத்தி பலமும், செல்வ பலமும் சமூகத்தைப் பொறுத்து இருப்பதால் இவைகள் விஷயமாக தனி நபர் உரிமையும், உடைமையும் கொண்டாடுவது நியாயமாகுமா?

"தேவைக்கு மேலாகப் பணம் சம்பாதிப்பதும், அதிகச் சொத்திற்குத் தனிநபர் உடைமை, உரிமை கொண்டாடுவதும் நியாயமில்லை. சொத்து உடமை சமூக நலனில் கலக்கவேண்டும். செல்வமும் அறிவும் சமூகத்திற்கு உதவவேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. சட்டத்திலும் சமூக முறையிலும் இன்று நிலவி வரும் தனிநபர் சொத்து உரிமை மாறவேண்டும்; அதாவது



அதிகச் செல்வம் தனி நபருடையது அல்லாமல் சமூக நலனுக்காக இருக்கவேண்டும்." நம் சுயநலம் குறுக்கிடாமலிருந்தால் மேற்கூறியபடித் தீர்மானிப்பது சுலபமாகும்.

## தானத்தின் அளவும் நோக்கமும்

குடும்பத்தில் சராசரி ஐந்து பேர் என ஏற்று "தரித்திர நாரயணன்" உருவமாக வெளியாளொருவனுக்குத் தன் உள்ளத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்ற கருத்திற்கிணங்க, தற்போது சம்பத்து தான யக்ஞத்தில் தன் வரும்படியில் குறைந்தது ஆறில் ஒரு பங்கு தானம் வழங்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இந்தப் பங்கு ஒரு முறையோ அல்லது ஒரு வருஷமோ மட்டிலும் கொடுப்பது என்று இல்லாமல் வாழ்நாள் முழுவதும் கொடுத்துவரவேண்டும். இந்தப் பணத்தை வேறு யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம்; தானே செலவு செய்து அதன் கணக்கை அனுப்ப வேண்டும். இச்செலவு மூன்று விதமாகச் செய்யப்படவேண்டும் என்று வினோபாஜி தெரிவித்திருக்கிறார்:—

1. பூமிதான யக்ஞத்தில் நிலதானம் பெறும் ஏழை விவசாயிகளுக்கு விவசாயச் சாதனங்கள், கருவிகள் தர,
2. இந்த யக்ஞங்களிலும், கிராம சேவையிலும் ஈடுபடும் ஊழியர்களுக்கு வாழ்க்கை ஊதியம் அளிக்க,
3. பிரசுரங்கள் வெளியிட, பிரசாரம் செய்ய.

இந்தத் திட்டத்தில் தானம் கொடுப்பவரிடம் பூர்ண நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. 'தர்மகர்த்தா' என்ற எண்ணத்தை அமலாக்க இது ஒரு உபயோகமான வழி.

ஸ்தூலமாகப் பார்ப்போருக்கு வாழ்நாள் முழுவதும் சம்பத்து தானம் கொடுத்துவருவது சுமையாகத் தோன்றும்; ஆனால் இம்முறையில் உள்ளத் தூய்மை ஏற்படும்; நம் வாழ்க்கையில் அடக்கம் ஏற்பட இது உதவும். இதில் சுய உணர்ச்சியால் சுயக்கட்டுப்பாடு ஏற்படும்.

இப்படி இல்லையானால் சமூகத்தில் என்ன நிகழ்கிறது? ஒரு கோடி சொத்துள்ளவர் அதை இரண்டு கோடியாக்கத் துடியாய்த் துடிக்கிறார். இதில் நேர்வழி இருக்கிறதா என்பதை கவனிப்பது இல்லை. இவ்வளவு பணம் சம்பாதிக்க என்ன அவசியம் ஏற்பட்டது? இப்பணத்தை என்ன செய்வது? இதில் தமக்கு நன்மையுண்டா இல்லையா என்று எத்தனை பேர் யோசிக்கிறார்கள்? பணக்காரர்கள் தங்கள் வேலை வெட்டிகளில் ஈடுபட்டிருப்பதால் அவர்களுக்குத் தேச சேவைக்கு ஓய்வு கிடையாது; ஏழைகளுக்கோ வயிற்றுப் பிழைப்பே கவலையாய் இருப்பதால் அவகாசம் கிடையாது; மத்தியதர வகுப்பினரோ விலைவாசி கிராக்கியால் வாடுகிறார்கள். எனவே தேச சேவைக்கு மிகச் சிலரே விதிவிலக்காக வருகின்றனர். இந்நிலையில் நாம் முன்னேறுவது எப்படி? உண்மையிலே, பணக்காரக் குடும்பங்களில் வேலை வெட்டியைச் சமாளிக்க வல்ல போதுமான நபர் இருப்பதால், பணக்காரர்களுக்கே அதிக வாய்ப்பு இருக்கிறது. நம் தார்மீக பரம்பரைப் படி, காலத்திற்கேற்ப அவர்கள் வானப்பிரஸ்தம் ஏற்று ஏழைகளின் சேவையில் இறங்க வேண்டும். ஆனால், உலகத்திலும், பணத்திலும் நமக்குள்ள தீவிர ஆசையால் சாகும்வரை இந்தக் கட்டிலிருந்து விடுபடும் எண்ணமே வருவதில்லை.

## தானத்தின் சில விபரங்கள்

பணக்காரர்கள் ஏதாவது கொஞ்சம் தானம் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. சிலர் தம் வரும்படியில் ஆறில் ஒரு பங்கிற்கு மேலும் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த தானம் சுய உணர்ச்சியால் வராமல் சாதாரணமாகவே பிறர் தூண்டுதலால் வருகிறது. சில பெரிய மனிதர் தானம் கேட்க வந்தால் மறுக்க முடிவதில்லை; எதற்காகத் தானம் கொடுக்கிறார்களோ அக்காரியம் அவர்களுக்குப் பிடிக்காமலும் இருக்கலாம். இவ்வாறான தானம்



வாங்குபவருக்கும், கொடுப்பவருக்கும் மனக் கஷ்டத்தை உண்டாக்குகிறது. இதற்கு மாறாக பிரதிவருஷமும் வரும்படியில் இவ்வளவு பங்கு தானம் அளிக்கப்படும் என்ற விதி வகுத்துக்கொண்டால், எந்த எந்த வேலை தன் தானத்திற்கு உகந்தது என்று நன்கொடையாளரே யோசிக்க முடியும். தமக்குப் பிடித்தமான வேளைகளில், நன்கு ஆலோசனை செய்து, தம் தானத் தொகையைச் செலவு செய்து தாம் விரும்பும் நோக்கம் வெற்றியடைவதைப் பார்க்கலாம். தம் வரும்படியில் ஒரு குறிப்பிட்ட அளவு தான தர்மத்திற்கெனப் பிரதி வருஷமும் ஒதுக்கும் வழக்கம் சில வியாபாரிகளிடம் இருக்கிறது. சில ஜெயினர்களோ, குறிப்பிட்ட அளவுக்குமேல் செல்வம் சேர்ப்பதில்லை என்ற விரதமும் மேற்கொள்கிறார்கள். இம்முறைகளையெல்லாம் சம்பத்துதான யக்ஞம் பரவலாக வளர்க்க விரும்புகிறது. பழைய முறையில் காலத்துக்கேற்றவாறு அமைப்பு இல்லை என்ற பெருங்குறை வந்துவிட்டது. தேசம், காலம், பாத்திரம் இவைகளுக்கு ஏற்றாற்போல இருப்பதே சாத்விக தானமாகும். சம்பத்து தானத்தைப்பற்றி வினோபாஜி கூறின நோக்கங்கள் நாட்டின் இன்றைய நிலைக்கு முற்றிலும் பொருந்தும். இன்று பணக்காரர்களால் வழங்கப்படும் தானத்தின் பலன் நகரங்களில் உள்ள மத்தியதர வகுப்பாருக்கே சாதாரணமாகக் கிடைக்கிறது; உண்மையில் பரம ஏழைக்கே தானம் கிடைக்க வேண்டும். தானம் வாங்குபவர்கள் செயலற்றுப் போகாமல், செயலில் ஈடுபட்டுத் தம் உழைப்பினால் நிரந்தரமாகத் தம் வாழ்க்கையைக் கவுரமாக நடத்த வேண்டியதையும் கவனித்துக் கொள்ள வேண்டும். பூமி தான யக்ஞம், சம்பத்து தான யக்ஞம் இவைகளால் இவ்வெண்ணம் நன்கு கைகூடுகிறது.

தம் வரும்படி குடும்ப நிர்வாகத்திற்கே போதாததாக இருந்து அவர்கள் ஆறில் ஒரு பங்கு சம்பத்து தானம் அளிப்பது கஷ்டமெனக் கருதினால் அவர்கள் தம்

சக்திக்கு ஏற்ற அளவு குறைவாக தானம் அளிக்கலாம். 'வாழ்நாள் முழுவதற்கும் சங்கல்பம் எடுத்துக்கொள்ளத் துணிவு இல்லாதவர்கள் குறிப்பிட்ட கால அளவுக்கு தானத்தை வரையறுத்துக் கொள்ளலாமா ? ஐந்து வருஷத்திற்கும் குறைவாகக் காலவரையறைவைக்க முடியுமா?' என்பவை யோசிக்க வேண்டிய விஷயங்கள்.

'' சம்பத்து தானமாக ஒரு பங்கு கொடுத்த பின்பும், மறுக்க முடியாத வேறுசில தானங்களும் கோரப்படுகின்றனவே. சம்பத்து தானம் செய்த பிறகு அதிகமாகக் கொடுக்கும் வல்லமை இருக்காதே '' என்கிறார்கள் சிலர். இந்நிலையில் விநோபாஜிக்கு எழுதி சம்பத்து தானத்தின் பங்கில் கொஞ்சம் ஏற்பாடு செய்துகொள்ளலாம்; ஆனால் சம்பத்து தான யக்ஞத்தின் பங்கு குறையக் கூடாது. ஏனெனில் சம்பத்து தான யக்ஞத்தில் சேரும் நோக்கம் வெற்றியாக வேண்டும். பணக்காரர்கள் வரவு அதிகமாக ஆக, அதேமாதிரி அவர்கள் சம்பத்து தான அளவும், ஆறில் ஒரு பங்கிற்கு அதிகமாகவே பெருக வேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது. தம் வரும்படியில் பங்கு கொடுக்க விரும்பாதவர்கள், தங்கள் குடும்பச் செலவில் ஒரு பாகம் கொடுக்கலாம். குடும்பச் செலவு என்பதில் விவாகம் முதலிய விசேஷச் செலவையும் சேர்த்து கணக்கிட வேண்டும்.

# அநுபந்தம் 1

## கொள்கை

பூமிதான யக்ஞத்தின் கொள்கை எதுவோ அதுவே தான் சம்பத்து தான யக்ஞத்திற்கும் அடிப்படைக் கொள்கை. இறுதியாக தனி நபர் நில உடமை பெறாமல் சமூகமே பெறவேண்டுமென்பதைப்போல, செல்வமும் தனி உடமையாக அமையாமல் சமூகத்தகாத அமைதல் வேண்டும். அது சமுதாயத்தினதாகவும் அதன் நன்மையை விளைப்பதாகவும் இருக்கவேண்டும். சமுதாய நலத்தைப் பேணும்பொழுது தனி நபரின் நலமும் பேணப்படுகின்றது. மனிதன் நிறை வாழ்க்கையை நாடும்பொழுது, சமுதாயத்துடன் பொருந்தியேதான் வாழவேண்டும். மனிதன் தன் உடம்பையோ, படிப்பையோ, செயல் திறனையோ, பொருளையோ, சமுதாயத்திடமிருந்தே நேராகவோ, மறைவாகவோ பெற்றிருக்கின்றான். தனதென்பவைகளால் மனிதன் நலம் பெறும்பொழுது சமுதாயமும் நலம் பெற வேண்டும். சம்பத்தின்—செல்வத்தின்—பயன் இதுவே என்பது விளக்கம். பொருளை அடையவும் உடல்பாடு வேண்டுவதன்றி, வஞ்சனையும் சுரண்டலும் கொண்டு பிறரதைப் பெறுதல் கூடாது. பொருளை நேரான வழிகளிலேயே பெறவேண்டும்.

## சம்பத்தி தானத்தின் உருவம்

மேல் விரித்த கொள்கையின் அடிப்படையில் பொருளாக்கத்தை அமர்த்த முதற்படியாக, பொருள் பெற்றவன் தன் வருவாயின் ஒரு பகுதியையோ, அது யாது காரணம் பற்றியோ கூடாததாயின் தன் குடும்பச் செலவின் ஒரு பகுதியையோ சமுதாயத்திற்கு தானமாகக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்பகுதி, கொடுப்பவரின் வருமானத்தை ஒட்டி, படிப்படியாக உயர்வதாகவும் அமைதல் வேண்டும். வறுமையால் வாடுபவனும் தன்

குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கொண்டு, தன் வருவாய், அல்லது செலவின் ஆறிலொரு பகுதியைக் கொடுக்க வேண்டும். ஆயின் ஐந்தில் ஒரு பகுதியே முறையாகக் கொள்ளப்பட வேண்டும். குடும்பச் செலவைக் கணக்கிடும் பொழுது, உண்டி, உடுக்கை செலவுகளுடன் குழந்தைகளின் கல்விக்காகும் செலவு, விவாகம் இவைகளுக்காகும் செலவு இவைகளையும் கூட்டிக்கொள்ளவேண்டுமென்பது அறியப்படவேண்டும். வருமான வரி போக மீதுவதெல்லாம் வருமானம் என்பதாகக் கருதப்பட வேண்டும். ஆறிலொரு பகுதி கேட்கப்படுகின்றது. ஆயின் இது ஒரு வரியல்ல, கொடுப்பவன் தன்னிஷ்டம் போல அதிகமும் குறைவும் கொடுக்கலாம். பெரு வருமானமுள்ளவர்கள் இந்த விகிதத்தைப் பாராட்டி நிற்கவேண்டுவதில்லை. யாருக்கு வருமானம் குறைந்து தங்கள் நிர்வாகத்திற்கும் போதாதிருக்கின்றதோ அவர்களும் சம்பத்து தானம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். ஆயின் அத்தகையவர்களின் பகுதி ஒரு அடையாள அளவிலேயே அமையும். பகுதிகளின் விகிதங்கள் நிற்க, உள்ள சொத்தெல்லாம் சமுதாயத்தது, ஆகையால் தான் பெற்றதையும் சமுதாயத்தின் தர்மகர்த்தா போன்று பரிபாலிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குடியானவர்கள் தங்கள் பகுதியை தானியமாகக் கொடுக்கலாம்.

## சம்பத்து தானத்தைச் செலவு செய்தல்

சம்பத்து தானப் பணத்தைப் பிறரிடம் கொடுப்பதென்பதில்லை. கொடுப்பவனே இதைச் செலவு செய்ய வேண்டும். வருஷத்திற்கு ஒரு முறை சர்வ சேவா சங்கத்திற்குச் செலவுக் கணக்கை அனுப்பவேண்டும். சம்பத்து தானப் பணத்தை எவ்வழியில் செலவு செய்ய வேண்டு



மென்பதை பூஜ்ய விநோபா அவர்கள் கீழுள்ள விதம் தெளிவாக்கியிருக்கின்றார் :

1. நிலமற்றவர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்படும் நிலத்திற்கு விதை, எருது, கிணறு முதலிய சாதனங்களைப் பெற்றுத்தரவும், நிலத்தைப் பண்படுத்தவும்,
2. பூதானம்மூலம் கிராம சேவையை மேற்கொள்ளும் தொண்டர்களுக்கு, குறைந்தபட்ச வாழ்க்கைச் செலவிற்கு உதவ,
3. சர்வோதய இலக்கியப் பிரசாரத்திற்கு உதவ;

இவையல்லாமலும் விநோபாவடிகளும், சர்வ சேவா சங்கமும் பிற காரியங்களையும் விரிவாகக் குறிப்பிடலாம். செலவினங்களில் எவைகளுக்கு எவ்வளவு செலவு செய்யலாமென்பதை கொடுப்பவரே நிர்ணயம் செய்து கொள்ளலாம். இவையல்லாமலும், சமுதாய நலத்திற்காகும் பிற செலவுகளையும் செய்யவேண்டி யிருக்கின்றதென்பதை பலர் சொல்லுகின்றார்கள். அவ்வாறுகும் செலவுகளுக்கு சம்பத்து தானத்தின் மூன்றிலொரு பகுதியைச் செலவு செய்து, மூன்றிலிரண்டு பங்கை மேற்குறித்த செலவுகளுக்கென ஒதுக்க வேண்டுமென்று விதிக்கப்படுகின்றது.

## இது சந்தா-நன்கொடையல்ல

சிலர் பூதான இயக்கத்திற்கு நன்கொடை கொடுக்க முன்வரினும், முறையாக சம்பத்து தானத்தைச் செய்யத் தயாராவதில்லை. சம்பத்துதான சங்கல்பமின்றி ஏதோ பண உதவி செய்வதாக மட்டும் அவர்கள் முன்வருகின்றார்கள். இத்தகைய நன்கொடைகளை வசூலிக்க ஆர்வங்காட்டலாகாது. நாம் செய்யக் கூடுவதை சம்பத்துதான யக்ஞ முறையிலேயே செய்யவேண்டும்.

## நிலமற்றவர்களுக்குச் சாதனங்கள்

நில விநியோகத்தால் நிலம் பெறுபவர்களுக்கு உதவ சம்பத்து தானத்தைச் செலவு செய்ய விரும்புபவர்கள், நிலம் பெறுபவர்கள் பெறவேண்டிய சாதனங்களை சாதனங்களாகவே அவர்களுக்குக் கொடுக்கவேண்டும், பணமாக அல்ல. அவர்களே அப்படிச் சாதனங்களைப் பெற்றுத் தருவது கூடாதாயின், மாகாண பூதான அமைப்புகள் அவர்களுக்கு உதவவும் துணை செய்யவும் உள்ளன.

## தொண்டர்களின் நிர்வாகச் செலவு

தொண்டர்களுக்கு உதவ சம்பத்து தானத்தைச் செலவு செய்யவேண்டியதாயின், பணத்தை சர்வ சேவா சங்க வழியாகச் செலவு செய்வதே நல்லது. பற்பல இடங்களிலும் அதை எப்படிச் செய்யவேண்டுமென்பதை சர்வ சேவாசங்கம் நிர்ணயிக்கும்.

## சர்வோதய இலக்கியப் பிரசாரம்

இலக்கியப் பிரசாரத்தில் இலவசமாகப் புஸ்தகங்களை விநியோகிப்பது கூடாது. விலையைக் குறைத்து விற்கலாம். சில ஸ்தாபனங்களுக்கும், மாணவர்களுக்கும், தொண்டர்களுக்கும் மான்யங்கள் கொடுக்கலாம்.

பொதுஜன வாசகசாலைகள், புஸ்தகாலயங்கள் இவைகளுக்கு இலவசமாகவும் புஸ்தகங்களை வழங்கலாம். சர்வோதய இலக்கியத்தில் எவைகளைச் சேர்க்கலாமென்பதற்கு அடிகளின் உதவியையும் நாடலாம். ஒரு இலக்கியப் பட்டியலைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். [சர்வ சேவா சங்க, சர்வோதயப் பிரசுராலய வெளியீடுகள் பட்டியலில் சேர்ந்தவையே.]

சம்பத்துதான இயக்கத்தின் இலட்சியங்களில் எந்த ஒன்றை முற்றுவிக்க ஒருவர் வேண்டினும், மாகாண பூதான அமைப்பு அவருக்கு வழி காட்டவும் உதவவும் வேண்டும்.



## சம்பத்து தானம் : விசேஷச் செலவுகள்

1. ஒரு சாதி ஹிந்து ஒரு ஹரிஜன இளைஞனை தன் குடும்பத்தில் ஒருவனாக வளர்ப்பதாயின் அச் செலவை சம்பத்து தானச் செலவாகக் கொள்ளலாம்.

2. ஸ்தாபனங்களின் தொண்டர்களும், உபாத்தியாயர்களும் ஒரே இடத்தில் வசித்து தங்கள் மாத வருமானங்கள் பலபடிகளில் அமைந்தாலும், அவைகளையெல்லாம் ஒன்றுகூட்டி மொத்தத்தினின்று, வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கையை ஒட்டிப் பிரித்து எடுத்துக்கொள்ள அவர்கள் தீர்மானிக்கும்பொழுது சம்பத்து தானத்திலிருந்து ஆதரவு காட்டுமளவில் சிறு தொகையை அவர்களுக்குக் கொடுக்கலாம்.

3. எளியவர்கள் சம்பத்து தானமாகக் கொடுப்பது சிறு தொகையாகவே இருக்கும். கொடுப்பவர்கள் அச் சிறு தொகைகளைத் தாமாகவே செலவு செய்வது கடினமாகலாம். இருபத்தைந்து ரூபாய்க்குக் குறைந்த தானங்கள் விஷயமாக கீழ்க்கண்ட குறிப்புகள் தரப்படுகின்றன :

அ. வழக்கமாக கதர் கட்டாதவர்கள், அத்தாட்சி பெற்ற கதரை ரூ. 50 வரை வாங்கி உபயோகித்தால், அதில் பாதித் தொகையை சம்பத்துதானச் செலவாகக் கொள்ளலாம்.

ஆ. கிராமத் தொழில்களின் பண்டங்களாகிய கைக் குத்தலரிசி, வெல்லம், தோல் சாமான்கள், பசு நெய் இவைகளை வாங்குவதிலாகும் தொகையின் நாலிலொரு பங்கை சம்பத்துதானச் செலவாகக் கொள்ளலாம்.

இ. கையால் மாவு அரைக்கப்படுவதாயின், கொடுக்கப்படும் கூலியில் சேருக்கு ஒரு அணு வீதம் சம்பத்து தானச் செலவாகக் கணக்கிடலாம். கதர்த் துணியும், கிராமத் தொழில்களும், சர்வோதய சமுதாயத்தை அமைக்க இன்றியமையாதவை. ஆகையால் அவைகள் வளர்ந்து விரியவேண்டும். அப் பண்டங்களின் உற்பத்தியும் துய்ப்பும் பெருகவேண்டும்.

ஈ. ஹிந்தியல்லாத பிற மொழிகளில் வெளியாகும் பூதானப் பத்திரிகைகளில் ஒன்றின் சந்தா—சம்பத்து தானச் செலவாகக் கொள்ளப்படும்.

உ. 'சர்வோதய வாசகர்கள்' திட்டத்தில் சேர்ந்து, பத்து ரூபாய்களுக்கு புஸ்தகங்கள் வாங்குவதில், ஐந்து ரூபாய் சம்பத்து தானச் செலவாகும்.

ஊ. எவர் வருஷம் பன்னிரண்டு ரூபாய் மட்டும் சம்பத்து தானம் கொடுக்க முடிகின்றதோ, அவர் தாமாகவே அத்தொகையை, தம்மிஷ்டப்படிச் செலவு செய்யலாம். அல்லது சிறு தொகையை தானம் செய்யும் பிறருடன் கூடியும் செலவு செய்யலாம். அவர்கள் சமுதாய நன்மைக்காகும் எத்தொண்டிற்கும் அதைச் செலவு செய்யலாம்.

## பலவகை

விவாகங்களில் சில வியாபாரிகள் கட்டாயமாக மஹிமைகள் வாங்குகிறார்கள். ஆனால் அத்தொகையை எப்படிச் செலவு செய்வதென்ற திட்டமிருப்பதில்லை. அப்படித் திரட்டப்பட்ட மஹிமைப் பணத்திலிருந்து ஒருவன் சம்பத்து தானம் கொடுக்கலாமா? அப்படித் திரட்டப்படும் பணத்திலிருந்து சம்பத்து தானம் செய்வது கூடாது.

ஒருவரிடம் வேண்டிய அளவு நில மிருக்கின்றது. பூதானமாக நிலம் கொடுக்காமல், அவர் சம்பத்து தானம் மட்டும் கொடுப்பதாயின் அதைப் பெறலாமா என்ற கேள்விக்கு, அவரிடமிருந்து சம்பத்து தானம் பெறக் கூடாதென்று முடிவு செய்யப்பட்டது.

## தொண்டர்களுக்குக் குறிப்புகள்

1. பூதான இயக்கத் தொண்டர்கள் ஒவ்வொருவரும் சம்பத்து தானத்தில் பங்கு கொள்ள வேண்டும். அவர் பூமியுள்ளவராயின் பூதானமும் செய்ய வேண்டும்.



2. நாம் எங்கு பூதானம் கேட்கவும் பெறவும் முயலுகின்றோமோ அங்கெல்லாம் சம்பத்து தானமும் பெற ஆர்வத்துடன் முயலுதல் வேண்டும்.

3. ஒருவர் பூதானமாக நிலம் கொடுத்தால் அவரிடமிருந்து சம்பத்து தானமும் பெறவேண்டும்; அவரும் இரண்டையும் கொடுத்து தான இயக்கத்தில் முற்றிலும் கலந்துகொள்ள வேண்டும்.

4. நாம் சாதாரணமாக பணக்காரர்களையும், நடுத்தர வகுப்பினரையுமே சம்பத்துதானம் பெற அணுகுகின்றோம். ஆயின் நாம் எளியவர்களையும் அணுகவேண்டும். அவர்கள் கொடுப்பது சிறிதாயிருக்கலாம்; ஆயின் அதனால் சிறந்த அநுகூலச் சூழ்நிலை உண்டாகும். எளியவர்களின் தானம் அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும்.

5. வாழ்க்கைக்கே போதாத வருமானம் பெறுபவர்களும் சம்பத்திதான யக்ஞத்தில் பங்குகொள்ள வேண்டுமென்று மேலே சொல்லப்பட்டது. ஆயின் அவர்களின் பகுதி அடையாள அளவில் அமையும். எளியவர்கள் கொடுக்கவேண்டிய பங்கு எது, பணக்காரர்களின் பங்கு எப்படிப் படிப்படியாக உயர்ந்தெழும் என்பவைகளைத் தெளிவுபடுத்துவது அவசியமானது. மேலும் பல வருஷங்களுக்கு சம்பத்து தானம் செய்ய முற்படும்பொழுது சில வருஷங்களில் வருமானம் குறையவும் பெருகவும் செய்யலாம். அப்படி ஆகும்பொழுது, பல தானபத்திரங்களை எழுதாமல், வருமானத்தின் ஏற்றக்குறைவையொட்டி அவ்வப்பொழுது சம்பத்து தானத்தைச் செய்யலாம். ஆகையால் தானம் வருமானத்தின் எப்பங்காக இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பது அவசியமாகின்றது.

வரி விகிதங்களின் கட்டுப்பாடு இதில் ஒன்றுமில்லை. கொடுப்பவன் தன்னிலையையொட்டி தானத்தை விரிவாக்கவும் சுருக்கவும் செய்யலாம். பூஜ்ய விநோபா அவர்கள் தரித்திர நாராயணனை குடும்பத்தில் சேர்த்துக்கொண்டு அவருக்

குண்டான பங்கைக் கொடுக்கவேண்டுமென்கிறார். உண்மையாக சம்பத்து தானம் அம்முறையிலேயே அமைதல் வேண்டும். ஆனால், குறைந்த வருமானம் பெறுகின்றவர்களின் நிலையை மனதில்கொண்டு, அவர் தானம் ஒரு சின்னமாயமைந்தால் போதும். அதுவே குறைந்த பக்ஷம், அதினும் குறைவதற்கில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

(ஐம்பது ரூபாய் வரை மாத வருமானம் பெறுபவர்கள் ரூபாய்க்கு ஒரு காலணா கொடுத்தால் போதும். ஐம்பதிற்கு மேல் நூற்றைம்பது வரை பெறுபவர் ரூபாய்க்கு அரையணா, அதற்குமேல் இருநூற்றைம்பது வரை பெறுபவர் ரூபாய்க்கு முக்காலணா கொடுத்தால் போதும். இவ்விதம் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு காலணா கூட்டி, வருமானத்தின் ஆறிலொரு பங்காகும் வரை அதை உயர்த்திக்கொண்டு போகவேண்டும். பெரிய வருமானம் உள்ளவர்கள் அதற்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

6. சம்பத்து தானம், சாதன தானம் இவை இரண்டையும் பெற ஒரே சமயத்தில் முயற்சி செய்யும்பொழுது ஒரு நிலை உண்டாகின்றது. நமக்கு சாதனங்களும் அவசியம் வேண்டும். ஆயின் ஒரு கூட்டத்தில், கூட்டாகவும், தனியாகவும் இரண்டு தானங்களையும் கேட்கும்பொழுது, சாதன தானம் கொடுப்பது சுலபமாக, சம்பத்து தான விஷயம் பின்னணிக்குப் போகின்றது. சம்பத்து தானம் ஆழ்ந்த விஷயம். இவ்வியக்கத்தில் அதற்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. அதற்கு முன்பு, சாதனதானம் சிறியதாகின்றது. சம்பத்து தானத்திற்கு இடையூறுண்டாகும் முறையில் எதையும் செய்யக்கூடாது. ஆகையால் நிலத்தை விநியோகிக்கும் பொழுது, நிலத்தைப் பெறுபவர்களுக்கு அவ்வருஷச் செலவுகளுக்கு வேண்டிய சாதனங்களையும் கொடுக்க வேண்டுமென்று, அங்குக் கூடியுள்ளவர்களிடம் சொல்லி அதைப் பெற்றாக வேண்டும்.



பிற எல்லா சமயங்களிலும் சம்பத்து தானத்தையே வற்புறுத்தவேண்டும்.

7. சிலர் தங்கள் தானம் இரகசியமாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் அதைத் தொண்டர்கள் இரகசியமாக வைக்க வேண்டும். மாகாண நிலையத்தில் அதற்கென ஒரு ரிஜிஸ்தர் இருக்க வேண்டும். அது முக்கிய நிர்வாகிகளின் பொறுப்பில் இருக்க வேண்டும்.

எளியவர்களும் பணக்காரர்களும் அனைவரும் சம்பத்து தான யக்ஞத்தில் பங்குகொள்ளவேண்டுமென்று கோரப்படுகின்றது. சிறப்பாக, அரசாங்கத்தில் பங்கு வகிப்பவர்கள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், தொழிலுற்பத்திக்காரர்கள், புத்தியுக்தமான தொழில்களை நடத்துகின்றவர்கள் இவர்கள் சம்பத்து தான யக்ஞத்தில் பங்குகொள்வார்கள் என நம்பப்படுகின்றது. மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர், அரசியல் தலைவர்கள், இவர்கள் சமுதாய மேம்பாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். தாங்களும் தானம் கொடுத்து, பிறரையும் கொடுக்கச்செய்ய வேண்டும்.

## அநுபந்தம் 2

1. வருமானம் எது?

வருமான வரி போன்ற கட்டணங்கள் போக நிகரமாக மீதமாவதே வருமானம்.

2. வருமானத்தில் எத்துணைப் பங்கு?

வருமானத்தின் எத்துணைப் பங்கு கொடுக்க வேண்டும், வருமானம் பெருகவும் குறையவும் செய்யும் பொழுது எப்படி மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி கீழே விளக்கம் தரப்படுகின்றது. மாத வருமானம் ஐம்பது ரூபாய் வரை ரூபாய்க்கு காலணா, ஐம்பதிலிருந்து இருநூற்றைம்பது வரை அரையணா, பிறகு ஒவ்வொரு அதிக நூறு ரூபாய் வருமானத்திற்கும் ஒவ்வொரு காலணாவாகக் கூட்டிக் கணக்கிட வேண்டும்.

வருமானம் பெருக தான ரூபாயும் அதிகமாகும். அவ்விதம் உயர்ந்து ஆறிலொரு பங்காகும் வரை பெருகும். ஆனால் விசேஷ வருமானம் பெறுகின்றவர்கள் இதற்கும் அதிகமாகத் தரவேண்டும்.

குடியானவர்கள் தங்கள் சம்பத்து தானத்தைத் தான்யமாகக் கொடுக்கலாம்.

3. தானத்தொகையை உபயோகித்தல் :

அ. வருஷத்திற்கு ரூ. 25-க்கு மேற்பட்ட தானங்கள்.

(1) பூதான யக்ஞத்தில் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் நிலத்தைப் பெறுபவர்களுக்கு சாதனங்களைக் கொடுக்கவும், நிலத்தைப் பண்படுத்தவும். (2) பூதான கிராம ஊழியர்களின் நிர்வாகத்திற்குச் சிறு ஊதியங்கள் உதவ. (3) சர்வோதய இலக்கிய பிரசாரம் செய்ய. (4) மேலும் சர்வ சேவா சங்கம், பூஜ்ய வினோபா அடிகள் இவர்கள் மேற்கொள்ளும் வேலைகளுக்காகச் செலவிடப்படும்.

தானம் கொடுப்பவர் விரும்பினால் அதில் மூன்றிலொரு பங்கை பொதுஜன நலத்திற்காகும் காரியங்களுக்குச்செலவு செய்யலாம், ஆனால் மூன்றிலிரண்டு பங்காவது மேலே குறித்த காரியங்களுக்கே செலவிடப்பட வேண்டும்.

ஆ. வருஷம் ரூ. 25-க்குட்பட்ட தானங்கள்.

வருஷம் ரூபாய் இருபத்தைந்திற்குக் குறைந்து தானம் செய்கின்றவர்கள், அவர்கள் விரும்பினால், கீழே உள்ள வழிகளில் அப்பணத்தைச் செலவு செய்யலாம் :

(1) வழக்கமாக கதரை உடுத்தாதவர்கள் ரூ. 50-க்கு கதர் வாங்கினால்—ஐம்பதில் பாதி சம்பத்து தானமாகக் கொள்ளப்படலாம்.

(2) கிராமச் செக்கு எண்ணை, கைக்குத்தலரிசி, வெல்லம், நாட்டுச் செருப்பு, பசு நெய், இவைகளை வாங்கும் செலவில் நாலிலொரு பங்கை சம்பத்து தானமாகக் கணக்கிடலாம்.

(3) கூலி கொடுத்து மாவரைப்பதானால், சேருக்கு



ஒரு அணா விதம் கணக்கிட்டு அதைச் சம்பத்து தானமாகக் கருதலாம்.

(4) ஹிந்தியல்லாத பிற மொழிகளிலுள்ள, சர்வோதய பூதானப் பத்திரிக்கைகளில் ஏதாவதொன்றிற்குக் கொடுக்கும் சந்தாவை சம்பத்து தானமாகக் கொள்ளலாம்.

(5) சர்வோதயப் படிப்பு கோஷ்டிக்கு வாங்கும் புஸ்தகங்களின் விலை பத்து ரூபாயானால் ஐந்து தானமாகக் கொள்ளப்படலாம்.

(6) வருஷத்திற்கு ரூபாய் பன்னிரண்டு வரை தானம் கொடுப்பவர்கள் தம்மிஷ்டப்படித் தாமேயோ, அதே தொகை தானம் கொடுக்கும் பிறருடன் கலந்து கொண்டோ, ஏதாவதொரு பொது நலக் காரியத்திற்குச் செலவு செய்யலாம்.

4. முறை வகுத்தல், கூட்டுறவு.

சம்பத்து தானத் தொகையைக் கூடியவரை கொடுப்பவரே செலவு செய்யவேண்டும். அவருக்கு, அது விஷயத்தில் விளக்கம் வேண்டியிருப்பின், மாகாணக் கமிட்டி, அதையும், அவருக்கு வேண்டிய உதவியையும் கொடுக்கும்.

Y2 W M95
N56
105981

श्री श्रीकृष्णदास जाजूजी लिखित
सम्पत्ति-दान-यज्ञ का तमिल रूपान्तर
अनुवादक—जी. सुब्रह्मण्यम

---

## எமது பூதானப் பிரசுரங்கள்

*

| | |
|---|---|
| பூதான உதயம் | —விநோபா |
| சர்வோதயப் பிரகடனம் | ,, |
| வணிகரே! வாரீர்! | ,, |
| கிராமங்களுக்கு ஆரோக்கிய திட்டம் | ,, |
| கிராமந்தோறும் சுயராஜ்யம் | ,, |
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | ,, |
| பூதான ஐய விளக்கம் | ,, |
| சர்வோதய ஆதாரங்கள் | ,, |
| ஜீவன் தானம் | —ஜயப்பிரகாசஜி |
| பூதானப் புரட்சிக்கு அறைகூவல் | ,, |
| சம்பத்துதான யக்ஞம் | —ஜாஜுஜி |
| பூதானத்தின் புரட்சித் தன்மை | —தர்மாதிகாரி |
| மனிதப் புரட்சி | ,, |
| பூதானமும் கிராம ராஜ்யமும் | —சங்கரராவ் தேவ் |
| பூதான ஜோதி | —விமலா தக்கர் |
| ஒரு மாபெரும் அநீதி | —டால்ஸ்டாய் |
| பூதானப் பாடல்கள் | —ராமலிங்கம் பிள்ளை |
| விநோபா வாழ்க்கை | |
| விநோபாவின் குரல் | —நெ. சிவசுப்பிரமணியம் |
| பூதான வெள்ளம் | —ம. சௌந்திரி |
| முதல் கிராமதானம்: மங்கரோட் | |
| தமிழ் நாட்டில் விநோபாஜியின் பிரவேசம் | |
| சென்னை நகரில் விநோபாஜி | |

---

கிடைக்குமிடங்கள் :—

கதர் வஸ்திராலயங்கள்.
சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்.